

# கிறிஸ்துவின் மணவாட்டி

## உன்னதபாட்டின் விளக்கவுரை

பாஸ்டர் மா. ஜான்ராஜ்

# சமர்ப்பணம்

*பூரண வடிவள்ள சீயோனிலே*
*பூரண மகிமையின் மணவாட்டியை*
*பூமியிலிருந்து பூக்கும் லீலியை*
*பூரிப்பாய் சேர்க்க வருபவரே*

*புதிய எருசலேமின் அலங்காரமே*
*புதிய துருத்தியின் திராட்சரசமே*
*புதிய மார்க்கத்தின் அஸ்திபாரமே*
*புண்ணியங்கள் ஆயிரம் செய்பவரே*
*பூரண பரிசுத்தம் தருபவரே*
*பூரண அன்பை பொழிந்தவரே*
*பூரண விசுவாசம் தந்தவரே*
*புதிதும் கூர்மையுமான இயந்திரமாக்கினீரே*
*இமைப்பொழுதில் எடுக்கவரும் மணவாளனே*
*இன்னமும் சிலரை இரட்சிக்க*
*இன்றும் கிருபை நல்கி*
*இறுதிவரை கடைசிவரை காப்பவரே*

*உமக்கு மணவாட்டி நூல் அர்ப்பணம்*

**பாஸ்டர் மா. ஜான்ராஜ்**
கர்மேல் ஜெப ஐக்கிய சபை
(காகா பவுண்டரி பின்புறம்)
1095/A அணில் நகர்,
திருத்தங்கல் - 626 130. இந்தியா.

# பொருளடக்கம்


1. மணவாட்டியின் பாட்டு
2. மணவாட்டி எடுத்துக்கொள்ளப் படுவாளா?
3. மணவாட்டி எப்படிப்பட்டவள்
4. மணவாட்டியின் பருவகாலங்கள்
5. மணவாட்டியின் தோட்டம்
6. மணவாட்டியின் மலைகள்
7. மணவாட்டியின் அன்பு

# கிறிஸ்துவின் மணவாட்டி

(உன்னதப்பாட்டு புத்தகத்தின் செய்திகள்)

## பாஸ்டர் மா. ஜான்ராஜ்

CARMEL PRAYER FELLOWSHIP
ZIM
ZIONFORT
INTERNATIONAL MINISTRIES

**சீயோன்கோட்டை**
**சர்வதேச ஊழியங்கள்**

வெளியிடுபவர்:
**உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்**
26/D, காந்தி ரோடு, பஸ் ஸ்டாண்டு மேற்குபுறம்,
சிவகாசி. 626123.
போன்: 0091-4562-230491
சபை: 0091-4562-277209
பேக்ஸ்: 0091-4562-230491
இமெயில்: pastor_m_johnraj@yahoo.com
Website : www.carmel.org.in

# கிறிஸ்துவின் மணவாட்டி

| | | |
|---|---|---|
| புத்தக வரிசை | : | 11 |
| முதற் பதிப்பு | : | டிசம்பர் 1995 |
| இரண்டாம்பதிப்பு | : | ஏப்ரல் 1998 |
| மூன்றாம் பதிப்பு | : | நவம்பர் 2011 |
| வெளியிடுவோர் | : | உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ் |
| மொத்தப் பிரதிகள் | : | 1000 |
| உரிமை | : | பாஸ்டர். மா.ஜான்ராஜ் |
| விலை | : | Rs. 25/- |
| | | வெளிநாடுகளில் 3 US.டாலர்கள். |

**புத்தகங்கள் கிடைக்குமிடம் :**

**இந்தியாவிலுள்ள அனைத்து கிறிஸ்தவ புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.**

**To Buy Online**

**www.TamilChristianStore.in**

**புத்தக தேவைக்கும் புத்தக ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

**பாஸ்டர். மா. ஜான்ராஜ்**

**உள்ளங்கை மேகம் பப்ளிகேஷன்ஸ்**

**26.D, காந்தி ரோடு,**

**சிவகாசி - 626123.**

**அலுவலக போன் : 0091-4562-277209**

**செல்: 8870002009**

**To Buy Online:**

**www.tamilchristianstore.in**

# 1

# மணவாட்டியின் பாட்டு

கிறிஸ்துவில் பிரியமுள்ள தேவஜனங்களே! இதுவரை அடியேன் மூலம் வெளியிட்ட புத்தக செய்திகளைப் படித்து ஆசீர்வதிக்கப்பட்டோரே! எனது இலக்கிய ஊழியத்தை ஜெபத்தாலும் காணிக்கைகளாலும் தாங்குவோரே! உங்களுக்கு தேவகிருபையும் சமாதானம் பெருகுவதாக!

வருடங்கள் உருண்டோடுகிறது. நாட்கள் வேகமாக நம்மைவிட்டு கடந்து செல்கிறது. ஆனாலும் கிறிஸ்துவின் வருகை இன்னும் சம்பவிக்கவில்லை. மணவாளனாகிய இயேசு கிறிஸ்து ''இதோ சீக்கிரம் வருகிறேன்'' என்கிறார். ஆனால் மணவாட்டி சபையின் ஊழியக்காரனாகிய யோவான் அப்போஸ்தலனோ ஆமென் இயேசுவே ''சீக்கிரமாய்'' வாரும் என்று அழைப்பதற்குப் பதிலாக ''ஆமென் இயேசுவே வாரும்'' என்று அழைத்தார். வெளி 22:20. சீக்கிரம் என்ற வார்த்தை இயேசுவின் வாயில் இருந்தது. ஆனால் சீக்கிரம் என்ற வார்த்தை யோவானின் வார்த்தையில் இல்லை. காரணம் என்ன?

ஆசியாவில் உள்ள ஏழு சபைகளுக்கும் கண்காணியாக இருந்த யோவான் ஊழியம் செய்த சபைகள் ஒவ்வொன்றிலும் குறைகள், குற்றங்கள், கறைகள் இருந்தன. கர்த்தர் சீக்கிரமாய் வருவாரானால் அநேக சபைகள் கைவிடப்படும்; அநேக விசுவாசிகள் கைவிடப் படுவார்கள் என்று தெரிந்தே ''சீக்கிரம்'' என்ற வார்த்தையை யோவான் பயன்படுத்தவில்லை.

இன்றும் இயேசுகிறிஸ்து சபையை எடுத்துக் கொள்ள வரவில்லை. தாமதம் செய்கிறார். எதற்காக? இன்னும் அநேகர் இரட்சிக்கப்பட வேண்டும். சபைகளில் பரிசுத்தமுள்ளவர்கள் இன்னும் பரிசுத்தமடைய வேண்டும். நிதி செய்கிறவர்கள் இன்னும்

நீதி செய்ய வேண்டும் என்றே கர்த்தரின் வருகை இன்னும் சம்பவிக்கவில்லை.

அடியேனுக்கும் நல்லதொரு ஸ்தல சபையையும் சில கிளை சபைகளையும் தேவன் தந்துள்ளார். இந்த சபைகளின் பரிசுத்தம் பெருகவும், ஊழியக்காரர்களின் நீதி அதிகரிக்கவும், கர்த்தருடைய வருகையில் தேவ ஜனங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற பாரத்துடன் ஜெபத்திலும், ' தியானத்திலும் இருந்த போது ''உன்னதப்பாட்டை'' தியானிக்க பரிசுத்த ஆவியானவர் என்னை வழிநடத்தினார்.

உன்னதப்பாட்டிலிருந்து அநேக செய்திகளைக் கர்த்தர் தந்தார். என் ஆவி களிகூர்ந்தது. என் ஆத்துமா பெலன் கொண்டது. என் சரீரத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை இறங்கியது. தேவ ஆவியானவரின் ஞானத்தினால் இப்புஸ்தகத்தை எழுதத் தொடங்கினேன். தேவ ஜனங்களே! புதிய எதிர்பார்ப்புடன் வாசியுங்கள். கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட வாஞ்சித்துப் படியுங்கள், கர்த்தர் உங்களை உன்னத அனுபவங்களுக்குள் வழி நடத்தி ஆசீர்வதிப்பார்.

தமிழ் வேதாகமத்தில் இப்புஸ்தகம் உன்னதப்பாட்டு என்று போட்டிருந்தாலும் ஆங்கில மொழியில் Songs of Song ''பாட்டுகளின் பாட்டு'' என்றும் எபிரேய மொழியில் இது பெரிய பாட்டு (The greatest song) என்றும் அழைக்கப்படுகிறது. நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ''ராஜாதி ராஜா'' என்றும், ''கர்த்தாதி கர்த்தர்'' என்றும் அழைக்கப்படுகிறார். ஆசரிப்புக் கூடாரத்தில் தேவன் வாசம் செய்யும் இடம் மகா பரிசுத்த ஸ்தலம் (Holy of Holies) என்று அழைக்கப்படுகிறது. உன்னதமான தேவனாகிய, மணவாளன் இயேசுவும், (ஆதி 14:23) உன்னதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு அழைக்கப்பட்ட மணவாட்டியும் சேர்ந்து இப்பாடல்களைப் பாடுகிறபடியால் இது உன்னதப்பாட்டு என அழைக்கப்படுகிறது!

உன்னதப்பாட்டு நூல் பரிசுத்த வேதாகம வரிசையில் 22 வது

புஸ்தகமாகும். இது பிரசங்கியின் புஸ்தகத்திற்கு அடுத்துள்ளது. பிரசங்கியில் மாயை, மாயை என்ற வார்த்தையை பல இடங்களில் காண்கிறோம். ஆனால் உன்னதப்பாட்டிலோ நேசம், நேசம் என்ற வார்த்தையைக் காண்கிறோம். பிரசங்கியின் புத்தகம் மனித வாழ்வின் ஏமாற்றத்தையும், அலைச்சலையும் சொல்கிறது. ஆனால் உன்னதப்பாட்டோ மனித வாழ்வில் கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் இளைப்பாறுதலையும், சமாதானத்தையும் சொல்கிறது. மனித அறிவில் மனிதனுக்கு திருப்தி கிடையாது என்பது பிரசங்கியாகும். ஆனால் உன்னதப்பாட்டோ மனிதனின் ஆத்துமா தெய்வீக அன்பினால் திருப்தியடைவதைச் சொல்கிறது.

சூரியனுக்கு கீழே சகலமும் மாயை என்று பிசங்கி சொல்கிறது. ஆனால் கிறிஸ்துவுக்குள்ளே நமது வாழ்க்கை அர்த்தமுள்ளதாகிறது என்று இயம்புவது உன்னதப்பாட்டாகும். பிரசங்கியில் மனிதனின் குறுக்குவழியில் வாழ்வு தேடும் குருட்டாட்டத்தின் முரட்டு முயற்சிகளைப் பார்க்கிறோம். ஆனால் உன்னதப் பாட்டிலோ நீதியின் பாதையில் உண்டாகும் மகிமையைப் பார்க்கிறோம். பிரசங்கியின் புஸ்தகம் முடியும் போது தீங்கு நாட்களையும், வயோதிப நாட்களின் வறண்ட காலங்களையும் சொல்கிறது. ஆனால் உன்னத பாட்டிலோ மரணமும், பாதாளமும் கூட பிரிக்க முடியாத நேசத்தோடு நிறைவு பெறுகிறது.

பிரசங்கியையும், உன்னதப் பாட்டையும் சாலமோன் ராஜாவே எழுதினார். கிறிஸ்துவுக்கு முன் சுமார் 1000 வருடங்களுக்கு முன்பே இப்புஸ்தகம் எழுதப்பட்டது. சாலமோன் மொத்தம் 1005 பாடல்களைப் பாடினார். அவற்றில் கடைசி ஐந்து பாடல்களே உன்னதப்பாட்டு என்று அழைக்கப்படுகிறது. 1 ராஜா 4 : 32.

மணவாட்டியின் பாடல்களை வேதத்தில் இன்னும் இரண்டு இடங்களில் காணலாம். சங்கீதம் 45 மணவாட்டின் பாடல் என்று அழைக்கலாம். இதேபோல் மணவாட்டியானவள் மத்தியவானத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு புதிய பாட்டைப் பாடுவாள் (வெளி 5 : 10) என்று தீர்க்கதரிசனமாக

எழுதப்பட்டுள்ளது.

உன்னதப்பாட்டில் சாலமோன் ராஜா, சூலமித்தியாள், எருசலேமின் குமாரத்திகள் போன்ற முக்கிய பாத்திரங்களைப் பார்க்கிறோம். சாலமோன் ராஜாவை நம்முடைய நித்திய மணவாளனுக்கு ஒப்பிட்டு இப்புஸ்தகம் சொல்கிறது. சூலமித்தியாளாகிய சீயோன் குமாரத்தியை திருச்சபையாகிய மணவாட்டிக்கு ஒப்பாக எழுதப்பட்டுள்ளது. எருசலேமின் குமாரத்திகளையோ மணவாட்டியின் தோழிகளாகவும், பூரணப்படாத விசுவாசிகளுக்கும் ஒப்பாக சொல்லப்பட்டுள்ளது.

ஆத்தும மணவாளன் இயேசுகிறிஸ்துவுக்கு நூற்றுக் கணக்கான நாமங்கள் வேதத்தில் உள்ளது. இது போலவே சாலமோனுக்கும் ஐந்து பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை பார்க்க முடியும். (ஆதாரம்; Dakes, page 664 (4rf) (I சாமு 12 : 24)

## 1. சாலமோன் :

இப்பெயர் தாவீது ராஜாவால் இடப்பட்டது (1சாமு 12 : 24) இதற்கு அர்த்தம் சமாதானத்தால் நிறைந்தவன் என்பதாகும். பெயருக்கு ஏற்றபடியே சாலமோனின் வாழ்க்கையில் சமாதானம் நிறைந்திருந்தது. (1ராஜா 5 : 4) ஆத்தும மணவாளன் இயேசுகிறிஸ்து சமாதான கர்த்தர் (ஆதி 49 : 10) என்றும் சமாதானப் பிரபு (ஏசா 9 : 6) என்றும் அழைக்கப்படுகிறார்.

## 2. யெத்தியா :

இப்பெயர் நாத்தான் தீர்க்கதரிசியால் இடப்பட்ட பெயராகும். இப்பெயருக்கு கர்த்தரால் சிநேகிக்கப்பட்டவன் என்று அர்த்தமாகும். ஆத்தும மணவாளன் இயேசு கிறிஸ்துவும் பிதாவாகிய தேவனால் சிநேகிக்கப்பட்டவராக இருந்தார் என்று காண முடியும். இவர் என்னுடைய நேசகுமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று மத் 3:17; மத் 17 : 5; ஆகிய இரண்டுமுறை சொல்லப்பட்டுள்ளது.

## 3. லேமுவேல் :

இப்பெயரில் குறிக்கப்படும் ராஜா யார் என்று பலருக்குப் பல சந்தேகங்கள் இருக்கலாம். ஆனால் TULMUD என்ற (டல்மட்) பூர்வீக பிரதிகளின் ஆதாரப்படி இப்பெயர் சாலமோன் ராஜாவையே குறிக்கிறது என்று அறிய முடிகிறது. நீதி 31 : 1ல் ''ராஜாவாகிய லேமுவேலுக்கடுத்த வசனங்கள்; அவன் தாய் அவனுக்கு போதித்த உபதேசமாவது : என்று தமிழிலும் ஆங்கிலத்திலோ ''அவன் தாய் அவனுக்கு போதித்த தீர்க்கதரிசன உபதேசமானது'' என்றும் சொல்லப்பட்டுள்ளது. இத்தீர்க்கதரிசன அதிகாரத்தில்தான் குணசாலியான ஸ்திரியைக் கண்டு பிடிப்பவன் யார்? நீதி 31 : 10 என்று மணவாட்டியைக் குறித்த தீர்க்கதரிசன முன் அறிவிப்பைக் காண்கிறோம்.

லேமுவேல் என்ற பெயருக்கு - ''தேவனுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டவன்'' என்று அர்த்தமாகும். ஆத்தும மணவாளன் இயேசுவும், தான் பிறந்த எட்டாம் நாளில் தேவாலயத்திலே கொண்டு வந்து பிதாவுக்காக (லூக் 2 : 23) ''கர்த்தருக்கு பரிசுத்தம்'' என்று ஒப்புக் கொடுக்கப்பட்டார். இயேசுகிறிஸ்து தன்னுடைய 33 வது வயதில் சரியான இளமைப்பருவத்திலே தன்னுடைய ஆத்துமாவை குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தார் (ஏசா 53 : 10) என்று பார்க்கிறோம்.

## 4. ஈத்தியேல் :

இப்பெயர் எந்த சந்தர்ப்பத்தில் சாலமோனுக்கு இடப்பட்டது என்று சரியாகப் சொல்லமுடியவில்லை. (நீதி 30 : 1) ஆனாலும் இப்பெயரிலும் ஆவிக்குரிய அர்த்தம் உள்ளது. ஈத்தியேல் - என்ற பெயருக்கு தேவன் என்னோடிருக்கிறார் என்று அர்த்தமாகும். ஆத்தும மணவாளன் இயேசுகிறிஸ்துவுக்கும் ''தேவன் என்னோடு இருக்கிறார் என்று அர்த்தமுடைய இம்மானுவேல் என்ற பெயர் உள்ளது என்று நாம் (மத் 1 : 23) அறிவோம்.

## 5. ஊகால் :

சாலமோனின் ஐந்தாவது பெயர் ஊகால் என்பதாகும். நீதி 30:1, இப்பெயருக்கு "வல்லமையுள்ளவர்" என்று அர்த்தமாகும். ஆத்தும மணவாளன் இயேசுவுக்கு சர்வ வல்லமையிருந்தது என்று சுவிசேஷங்களில் காண்கிறோம். இயேசுகிறிஸ்துவே "வல்லமையுள்ள தேவன்" என்று ஏசா 9:6 ல் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டுள்ளது.

எனவே சாலமோனின் உன்னதப்பாட்டை தியானிக்கும்போது சாலமோனிலும் பெரியவராகிய ஆத்தும மணவாளன் இயேசுவோடு இப்புஸ்தகத்தை ஒப்பிட்டு படிக்க வேண்டும். வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சயதோற்றமான பொருளை உடையது அல்ல. அவைகள் ஆவிக்குரிய பிரகாரம் நிதானித்து வியாயக்கியானப்படுத்தி விளங்கிக் கொள்ள வேண்டும்.

## சீமோன் குமாரத்தி :

உன்னதப்பாட்டில் சாலமோன் ராஜா தேடிச் சென்ற, நேச மணவாட்டியின் பெயர் சூலமித்தியாள் என்று காண்கிறோம். இவள் இப்புஸ்தகத்தில் சீயோன் குமாரத்தி என்று உவமிக்கப்படுகிறாள். உன் 3:11. சீயோன் குமாரத்திதான் மணவாட்டி சபை என்று வேதத்தில் இன்னும் பல இடங்களில் பார்க்கமுடியும். ஏசா 3:16,17 செப் 3:14; சகரியா 2:10

சீயோன் குமாரத்தி என்று மணவாட்டி ஏன் அழைக்கப்படுகிறாள்? சீயோன் குமாரத்தி என்ற பெயருக்கு பூரண அழகுள்ளவள் என்று அர்த்தம். சங் 50:2. சங் 48:2. பரலோக சீயோனிலே பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவிகள் வாசம்பண்ணுவதாகவும், அதுவே முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை யென்றும் பார்க்கிறோம். எபி 12:22, 23.

உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் மொத்தம் 12 முறை ரூபவதி என்று அழைக்கப்படுகிறாள். இதில் எருசலோமின்

குமாரத்திகளாகிய மணவாட்டியின் தோழிகள் மூன்று முறை ரூபவதி என்று அழைத்தார்கள். (1:8; 5:9; 6:1). மணவாளன் தன்னுடைய நேச மணவாட்டியைப் பார்த்து ஒன்பது முறை நீ ரூபவதி என்று அழைக்கிறார். (1:15; 2:10; 4:1; 4:7; 5:9; 6:1; 7:6).

தேவனுடைய ஜனம் இரட்சிக்கப்பட்டால் மட்டும் போதாது. ஞானஸ்நானம் பெற்றால் மட்டும் போதாது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து, வளர்ந்து கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரணப்பட வேண்டும். (எபேச4:7) பூரண அழகுள்ளவர்களாக மறுரூபப்படவேண்டும். ராஜாகுமாரத்தி உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள் (சந் 45:13) என்ற இடத்திற்கு நாம் வந்தோமானால்தான் கர்த்தருடைய வருகையில் மணவாட்டியாக மணவரையில் காணப்பட முடியும்.

★ பரிசுத்தத்தில் பூரணம் II கொரி 7:1

★ அன்பில் பூரணம் I யோவான் 2:5

★ பொறுமையில் பூரணம் யாக், 1:4

★ வார்த்தையில் பூரணம் யாக் 3:2

★ விசுவாசத்தில் பூரணம் யாக் 2:22

★ மனச்சாட்சியில் பூரணம் எபி 10:1; 10:14; 9:14.

★ கீழ்ப்படிதலின் பூரணம் எபி 5:8, 9

★ மகிமையில் பூரணம் சங் 45:13; IIகொரி 3:18.

ஆகிய எட்டு காரியங்களிலும் நாம் பூரண வளர்ச்சியடையும்போது சீயோனின் பூரண அழகு நம்மில் பிரதிபலிக்கும். அப்பொழுதுதான் கர்த்தருடைய வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்பட முடியும். எனவேதான் ''பூரணராகும்படி கடந்து போவோமாக'' என்று எபி 6:2 லும் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண

சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள் என்று மத் 5 : 48 லிலும் நம் ஆண்டவர் சொல்லியுள்ளார்.

இரட்சிக்கப்பட்ட கர்த்தருடைய பிள்ளையே! நீ எருசலேமின் குமாரத்தியைப் போல் இருக்கிறாயா? அல்லது சீயோன் குமாரத்தியைப் போல் வாழ்கிறாயா? எருசலேமின் குமாரத்திகளை இப்புஸ்தகம் ஆறுமுறை சொல்லியுள்ளது. (1:5; 2:7; 3:5; 5:8; 5:16; 8:4) இவர்களும் நேசரைப் பின்பற்றினவர்கள்தான். நேசரைத் தேடினவர்கள் தான். ஆனாலும் மணவரையின் கதவுக்கு வெளியே நின்று கதவைத் தட்டித் கொண்டே இருந்த கைவிடப்பட்ட கிறிஸ்தவர்களாயிருந்தார்கள். எனவே தேவ பிள்ளையே! நேசமணவாளன் இயேசுகிறிஸ்துவுக்காக நீ ஜீவிப்பது மட்டுமல்லாமல் அவரின் வருகையிலே காணப்பட தீவிரப்படு, இப்புஸ்தகத்தின் செய்திகள் உன்னை அதற்காக அனல்மூட்டும். பூரண வளர்ச்சி பெற ஆவலோடு வளர்ந்து முன்னேற கர்த்தர் உனக்கு உதவி செய்வார்.

உன்னதப்பாட்டின் திறவுகோல் விவாக அன்பு (Wedded love) என்பதாகும். இப்புஸ்தகத்தில் நேசக் கொடி பறப்பதைக் காணமுடியும். உன் 2:4, நேசம் என்னும் சமுக்காளம் விரித்திருப்பது இப்புஸ்தகத்தில்தான். இப்புஸ்தகத்தில் ''நேசர்'' என்ற சொல் 35 முறையும் ''நேசம்'' என்ற வார்த்தை 15 முறையும் வருகிறது. ஆகமொத்தம் 50 முறை விவாக அன்பு சொல்லப்பட்டுள்ளது. 50 என்ற எண் பெந்தேகோஸ்தே என்று அர்த்தம். பெந்தேகோஸ்தே என்றாலே சிலருக்கு பித்துப்பிடித்தது போல் காத தூரம் ஓட்டம் பிடிப்பவர்கள் மணவாட்டியாக முடியாது. உலக உல்லாசத்தில் உலா வரும் போலி கிறிஸ்தவர்கள் சொப்பனத்தில்கூட கர்த்தருடைய வருகையைக் காணமுடியாது.

# 2

# மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுவாளா?

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை மத்தியவானில் எடுத்துக் கொள்ளப்படுமோ? என்று இன்று பல கிறிஸ்தவர்களுக்கும் வேதப் பண்டிதர்களுக்கும் சந்தேகங்கள் எழுந்துள்ளன? எனவேதான் இந்த அத்தியாயத்தில் இந்த சத்தியத்தை சற்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். எந்த ஒரு புதிய உபதேசமும் மேல் நாட்டாரிடத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என்பதை முதலாவது நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

மணவாட்டியைப் பற்றிய வெளிப்பாடுகள் உள்ள உன்னதப் பாட்டில் மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுவாள் என்று வேதம் சொல்கிறது. ''நினையாததற்கு முன்னே என் ஆத்துமா என்னை அம்மினதாபின் இரதங்களுக்கு ஒப்பாகிற்று. திரும்பி வா, திரும்பி வா, சூலமித்தியே! நாங்கள் உன்னைப் பார்க்கும்படிக்கு திரும்பிவா, திரும்பி வா''. (உன் 6:12, 13) என்ற வசனத்தில் மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுகிறாள் என்று பார்க்கிறோம். இந்த வசனத்தில் ஐந்து காரியங்களைப் பார்ப்போம்.

## A. அம்மினதாபின் இரதம்:

அம்மினதாப் - என்ற பெயருக்கு என் இனத்தான் தயையுள்ளவர் என்று பொருளாகும். நமது இனத்தார் யார்? நமது இனத்தார் நம் இரட்சகராகிய இயேசுவே. பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராய் இருக்கிறதுபோல அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார் (எபி 2:14) என்று சொல்லப்பட்டுள்ளதால் இயேசுகிறிஸ்துவே நமது இனத்தார்.

இயேசு கிறிஸ்துவே தயையுள்ளவர், மன்னிக்கக்கிறதிலே தயையுள்ளவர். தயை உள்ளவனுக்கு தயை உள்ளவரானவர். இவருடைய இரதம் எது? இயேசுகிறிஸ்துவின் இரதம் மேகமாகும். பல சீஷர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் இயேசுகிறிஸ்து உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்.

அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் எடுத்துக் கொண்டது. (அப் :9). எனவே நம் ஆண்டவரின் இரதம் வானத்து மேகமாகும். இவ்விதமாக சூலமித்தியாளின் ஆத்துமா நினையாததற்கு முன்னே அம்மினதாபின் இரதம் போல மேகத்தில் ஏறி பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்று அறிகிறோம்.

## B. நினையாததுக்கு முன்னே :

சூலமித்தியாளின் ஆத்துமா நினையாததுக்கு முன்னே பறந்து சென்றது. கர்த்தருடைய வருகை நமக்கு சொல்லிக் கொண்டு வருவதில்லை. மனுஷகுமாரன் வரும் நாளை ஒருவரும் அறியார். இவைகள் நடக்குங்காலங்களையும், சமயங்களையும் குறித்து உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் வரும் என்று வேதம் சொல்கிறது. (1 தெச 5 : 1,2. வெளி 16 : 15; II பேதுரு 3 : 10) அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனஷகுமாரன் வருவார். ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்று (லூக் 12 : 40) நம் ஆண்டவர் சொன்னது போலவே சூலமித்தியாளுக்கு சம்பவித்தது. நமக்கும் அப்படியே சம்பவிக்கப் போகிறது.

## C. இயேசுவுக்கு ஒப்பாவோம் :

நினையாததற்கு முன்னே சூலமித்தியின் ஆத்துமா அம்மினதாபின் இரதத்திற்கு ஒப்பானது போல் மணவாட்டியாகிய சபையும், மணவாளனுக்கு ஒப்பாக மறுரூபம் அடையப்போகிறது என்பதே வேதசத்தியம். நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற

இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு, ஒப்பாக மறுரூபப்படுத்துவார். (பிலி 3:20, 21) என்றே சொல்லப்பட்டுள்ளது. நாம் நம்முடைய மணவாளனுக்கு ஒப்பாகப் போகிறோம் என்பதற்கு 1 யோவான் 3:2 திட்டவட்டமான ஆதாரமாயிருக்கிறது. எனவே இயேசு கிறிஸ்துவாகிய நமது ஆத்ம மணவாளன் நம்மைச் சந்திக்க பரலோகத்திலிருந்து இறங்கிவர, நாம் மறுரூபமடைந்து மேகங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஏழு வருடங்களுக்கு மத்திய வானத்தில் மணவாளனோடு சந்தோசப் படப் போகிறோம். ஆனால் பூரணப்படாத, கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படாதவர்கள் கைவிடப் படுவார்கள்.

### D. *திரும்பி வா, திரும்பி வா :*

சீயோன் குமாரத்தியான பூரண அழகுள்ள சூலமித்தியாள் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு எருசலேமின் குமாரத்திகள் கைவிடப்பட்டவர்களாக அங்கலாய்க்கிறார்கள். அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் உள்ள இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான். மற்றவன் கைவிடப்படுவான், திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரிகளில் ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள். வயலிலிருக்கிற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப் படுவான். மற்றவன் கைவிடப்படுவான் (லூக் 17:34 - 36) என்று இயேசுகிறிஸ்து சொல்லியபடியே பூரணப்பட்ட தேவ ஜனம் கர்த்தரிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். மற்றவர்கள் கைவிடப்படுவார்கள் என்று அறிகிறோம். கைவிடப்பட்ட எருசலேமின் குமாரத்திகள் எடுத்துக் கொள்ளப்பட்ட சூலமித்தியாளை திரும்பவும் பூலோகத்திற்கு வர அழைத்தார்கள். திரும்பிவா, திரும்பிவா சூலமித்தியே திரும்பிவா, திரும்பி வா என்றழைத்தார்கள். உப்பைப் போன்ற

பரிசுத்தவான்கள் பரலோகம் சென்ற பின்பு உப்பில்லாப் பண்டம் குப்பைதானே! அதுபோல் மணவாட்டி இல்லாத இந்த உலகம் குப்பை போல காட்சியளிக்கும் பூமிக்கு வெளிச்சமாயிருந்த சபையாகிய குத்துவிளக்கு மத்திய வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு மணவாட்டியில்லாத இந்த உலகம் இருள் நிறைந்ததாக இருக்கும். எனவேதான் சூலமித்தியே திரும்பிவா என்று அழைத்தார்கள். தேவஜனமே விழித்திருந்து ஜீவித்து கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட பூரணத்திற்கு நேராய் கடந்து செல், முற்றிலும் பரிசுத்தமாக வாழ உன்னை ஒப்புக்கொடு.

## E. இரண்டு சேனை :

எருசலேமின் குமாரத்தியினிடத்தில் இல்லாத சிறப்பு சீயோன் குமாரத்தியாகிய சூலமித்தியினிடத்தில் இருந்தது. எனவேதான் அவள் மேகத்தில் ஏறி வானத்திற்குள் போனாள். மணவாட்டியின் சிறப்புதான் என்ன?

''சூலமித்தியில் நீங்கள் என்னத்தைப் பார்க்கிறீர்கள்? அவள் இரண்டுசேனையின் கூட்டத்திற்கு சமானமானவள் (உன் 6 : 13) என்று பரிசுத்த ஆவியானவர் சொல்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் இரண்டு சேனையின் கூட்டத்தை மூன்று இடங்களில் பார்க்கிறோம்.

யாக் கோபு பிரயாணம் செய்கையில் தேவதூதர்கள் அவனை சந்தித்தார்கள். யாக்கோபு அவர்களைக் கண்டபோது இது தேவனுடைய சேனை என்று சொல்லி அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பெயரிட்டான். மக்னாயீம் என்பதற்கு இரண்டு சேனை என்று பொருள். யாக்கோபுக்கு இரண்டு பரிவாரங்களாகிய மனைவி, பிள்ளைகள் ஆடுமாடுகள் உண்டு. ஏசா ஒரு பகுதியின் மேல் விழுந்து அதை முறிய அடித்தாலும் மற்றப்பகுதி தப்பித்துக் கொள்ள இடம் உண்டு என்றான். (ஆதி 32 : 1; 32 ௲ 8) ஆனால் தேவன் அனுப்பிய தேவதூதர்களுடைய சேனை ஒரு சேனை அல்ல. இரண்டு சேனையாகும். எனவே இரண்டு சேனையின் தூதர்கள் பாதுகாத்தார்கள். சிறு நஷ்டம், சிறு தோல்விகூட

யாக்கோபுக்கு நேரிடவில்லை. எனவே இரண்டு சேனை என்பது பரிபூரண ஜெய வாழ்க்கையைக் குறிக்கிறது.

இரண்டாவதாக யோசுவா என்ற தளகர்த்தன் ஆயி பட்டணத்திற்கு யுத்தத்திற்கு போனபோது தன்னிடம் உள்ள சேனை வீரர்களை இரண்டாகப் பிரித்தான். சுமார் 5000 பேர்களை ஆயி பட்டணத்திற்கு மேற்கில் நிறுத்தினான். சுமார் 25000 பேர்களை ஆயி பட்டணத்திற்கு வடக்கே நிறுத்தினான். இந்த இரண்டு சேனையும் ஆயி பட்டணத்தின்மேல் யுத்தம் செய்தபோது யோசுவாவுக்கும் அவனுடைய ஜனத்திற்கும் பரிபூரண வெற்றியுண்டானது. (யோசுவா. 8 : 1 - 9)

மூன்றாவதாக சூலமித்தியாள் இரண்டு சேனையின் கூட்டத்திற்கு சமானமாய் இருந்தாள் என்பது அவளுடைய பரிபூரண வெற்றியின் ஜீவியமே அவளை உயர்த்திற்று. தேவனுடைய ஜனமே! உலம், மாமிசம், பிசாசோடு நமக்குள்ள யுத்தத்தில் பூரண ஜெயம் எடுத்துக் கொண்டோமானால் மட்டுமே கர்த்தருடைய வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்பட தகுதியுடையவர்களாகிறோம்.

## இரகசிய வருகைக்கு திருஷ் டாந்தங்கள் :

மணவாட்டி சபையானது மத்திய ஆகாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதற்கு பழைய ஏற்பாட்டிலும் அநேக திருஷ்டாந்தங்களைப் பார்க்க முடியும். திருச்சபையானது உபத்திரவ காலத்தைச் சந்திக்கப் போவது கிடையாது. அந்திக்கிறிஸ்து இந்த உலகத்தில் வெளிப்படுவதற்கு முன்பாகவே மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுவாள். உதாரணமாக ஜலப்பிரளயத்தில் இந்த உலகம் அழிவதற்கு சில வடங்களுக்கு முன்பாகவே ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

சோதோம் கொமாரா பட்டணம் அக்கினியினால் அழிவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு லோத்தின் குடும்பம் அழிவுக்கு தப்பியது.

ஆகாபின் அட்டூழியங்களும், யேசபேலின் வேசித்தனங்களும் ஏராளமாகப் பெருகியபோது எலியா எடுத்துக் கொள்ளப்பட்டான். எலிசா தீர்க்கதரிசியே ஆகாபோடும் யேசபேலேடும் எதிர்த்து யுத்தம் செய்தார். இதுபோலவே மணவாட்டி சபையானது உபத்திரவ காலத்திற்கு முன்பே இரகசியவருகையில் எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு திட்டவட்டமான வசன ஆதாரங்களைக் காண்போம்.

1. கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் எடுத்துக் கொள்ளப்பட்டு (caught away) இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1தெச 4 : 17) என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்.

**Rapture** என்ற வார்த்தை வேதத்தில் இல்லை. எனவே சபையானது எடுத்துக் கொள்ளப்படுதலும் கிடையாது என்று சிலர் வாதிடுகின்றனர். Rapture என்ற வார்த்தையானது Raptu என்ற லத்தின் வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு கிரேக்க மொழியில் Harpazo என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளது. இந்த Raptu என்ற வார்த்தைக்கும் Harpazo என்ற வார்த்தைக்கும் Caught away அல்லது Caught up எடுத்துக் கொள்ளப்படுதல் என்று அர்த்தமாகும். எனவே சந்தேகமில்லாமல் சபையானது இரகசிய வருகையில் பறந்து செல்லும் என்று தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

இந்த Caught up - எடுத்துக் கொள்ளப்படுதல் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இன்னும் மூன்று இடத்தில் வருகிறது. சுவிசேஷகராகிய பிலிப்புவும் கந்தாகே மந்திரியும் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். (Caught away) அப் 8 : 39, பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டான்.

கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன். அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான். (Caught up to the third Heaven) II கொரி 12 : 2, பவுல் அப்போஸ்தலன் சரீரத்தில் இருந்தாரோ சரீரத்திற்குப் புறம்பே இருந்தாரோ? ஆனால் அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

சகல ஜனங்களையும் இருப்புக் கோலால் ஆளுகை செய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள். அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்கா சனத்தினிடத்திற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது. (Caught up un to God and to his throne) வெளி 12 : 5.

இந்த மூன்று வசனங்களும் எழுத்தின்படியே நிறைவேறியது. இதுபோலவே தேவனுடைய சபையும் எழுத்தின்படியே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படப் போகிறது.

2. புதிய ஏற்பாட்டில் சரித்திர வரிசையின்படி நான்கு சிங்காசனங்கள் வரப்போகிறதைக் காணலாம். இந்த நான்கு சிங்காசனங்களின் சத்தியத்திலும் சபையானது எடுத்துக் கொள்ளப்படுதலையும், கிறிஸ்துவின் இரகசிய வருகையையும் காண முடியும்.

ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (The Judgement seat of Christ) II கொரி 5 : 10 இந்த சிங்காசனத்திற்கு BEMA என்ற கிரேக்க வார்த்தை உள்ளது. இதற்கு நியாயத்தீர்ப்புக்கு கொடுக்கும் சிங்காசனம் என்று அர்த்தம் அல்ல. தன் தோட்டத்தில் பகல் எல்லாம் வேலை செய்தவர்களுக்கு மாலையிலே சம்பளம் கொடுக்கும் எஜமான் உட்காரும் சிங்காசனமே Bema என்பதாகும். எனவே தேவனுடைய சபையானது நியாயத்தீர்ப்பு பூமியிலே வெளிப்படுவதற்கு முன்பே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு கூலியைப் பெறும். பாராட்டு பெறும். வெகுமானங்களைப் பெறும். (1கொரி 3:14) (1கொரி 4:5) (வெளி 22:12).

இரண்டாவதாக நம் மணவாளனாகிய இயேசு கிறிஸ்து தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். (Throne of his glory) மத் 25 : 31 அப்பொழுது ஆயிர வருட அரசாட்சி தொடங்கும். கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படுவார் II தெச 1 : 8, கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும், அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரத்தார் எல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். (சகரியா. 14 : 4; வெளி 1 : 7) இயேசு கிறிஸ்துவோடுகூட ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடு (தமது மணவாட்டியோடு) கூடக் கர்த்தர் வருவார் யூதா 1 : 15. இதுவே பகிரங்க வருகை.

மூன்றாவதாக பெரிய வெள்ளைச் சிங்காசனத்தில் இயேசுகிறிஸ்து அமருவார் (The great white throne) வெளி 20 :11. சகலருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுப்பார். அந்த ஆயிரவருட அரசாட்சிக்குப் பின்பே இந்த வெள்ளைச் சிங்காசனத்தில் இயேசுகிறிஸ்து அமருவார். சகல ஜனங்களையும் நம் தேவன் நியாயந் தீர்ப்பார். ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் எவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவான். வெளி 20 : 15.

கடைசியாக நம் ஆண்டவர் ஆட்டுக்குட்டியானவரின் சிங்காசனத்தில் அமருவார். (Throne of God and the Lamp). இதுவே நித்திய யுகம். வெளி 22 : 1. எனவே தேவஜனமே கர்த்தருடைய வருகையில் நீ எடுத்துக் கொள்ளப்பட தீவிரப்படு, கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாகப் போய் நிற்பதற்கு ஆவல் உள்ளவனாயிரு.

3. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கும் இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான்

மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். யோவான் 14:2, 3 என்று நம் ஆண்டவர் சொல்லிவிட்டுச் சென்றபடியால் நாம் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளபடுவோம் என்று நிரூபணமாகிறது.

4. தவறான உபதேசமானது கலாத்திய சபையை ஆவிக்குரிய மயக்கத்திற்குள் தள்ளியது. கலா 3:1, மாம்ச இச்சைக்கும், பிசாசுக்கும் இடங் கொடுத்தவர்களும் ஆவிக்குரிய மயக்கத்திற்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் (11 தீமோ 2:26) என்றே பவுல் சொல்கிறார். மயக்கமடைந்தவனின் மயக்க நிலை சீக்கிரத்தில் நீங்கி தெளிவு பெறாவிட்டால் தொடர்ந்து மரணம் சம்பவிக்கும் எனவேதான் தவறான உபதேசங்களுக்கு ஜனங்கள் இடங்கொடுத்து ஆவிக்குரிய மயக்கத்தில் விழுந்து விடாதபடி இதை எழுதுகிறேன்.

தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்றே நியமித்தார். (1 தெச 5:9). அதாவது வெளிப்படுத்தின விஷேசத்தில் சொல்லப்பட்டுள்ள அந்திக்கிறிஸ்துவின் அரசாட்சி வேளையில் நம் தேவன் ஊற்றப்போகும் ஏழு கோப கலசங்களில் நாம் சிக்கப்போவதில்லை. அதற்கு முன்பே சபையானது எடுத்துக் கொள்ப்படும் என்று பவுல் எழுதுகிறார்.

5. தேவனுடைய சபையின் எதிர்பார்ப்பு அந்திக்கிறிஸ்துவின் அட்டூழியங்களை அல்ல. ஆனந்த பாக்கிய நம்பிக்கையே (The blessed hope) மணவாட்டியின் எதிர்பார்ப்பாகும். நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. (தீத்து 2:13)

6. இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாம் எல்லோரும் நித்திரையடைவதில்லை. ஆயினும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் (1கொரி 15:51) என்று

அப்.பவுல் சொல்வதினாலே மணவாட்டி சபையானது உபத்திரவ காலத்தை சந்திப்பது இல்லையென்று நிரூபணமாகிறது.

7. மணவாளனை சந்திக்கப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளும் அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்டார்கள் (மத் 25:1) என்றே நம் ஆண்டவர் சொன்னார். ஈசாக்கு வீட்டை விட்டு வெளியே தியானம் செய்ய வந்தார். ரெபெக்காளும் தன் தகப்பன் வீட்டைவிட்டு வந்தாள். இந்த மணவாளனும் மணவாட்டியும் வயல் வெளியில் சந்தித்துகொண்டார்கள். இதுபோலவே மணவாளன் இயேசுவும் மணவாட்டி சபையும் மத்திய வானத்திலே சந்திக்கப் போகிறார்கள். அல்லேலூயா!

8. ஆசியாவில் உள்ள ஏழு சபைகளிலும் குற்றம் சாட்டப்படாத சபை பிலதெல்பியா சபையாகும். அந்த சபைக்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன?

''என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாக பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைக் காலத்திற்கு தப்பும்படி (அந்திக்கிறிஸ்துவின் அட்டுழியங்களுக்கு தப்பும்படி) நானும் உன்னைக் காப்பேன் என்றார். (வெளி 3:10) எனவே தேவனுடைய பிள்ளையே! நீயும் நானும் குற்றம் சாட்டப்படாத பரிசுத்தவான்களாக ஜீவிப்போமானால் கர்த்தருடைய வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்படுவோம். (1கொரி 1:8)

9. முடிவாக நம் ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கும் வாக்குத் தத்தத்தைப் பிடித்துக் கொள்வோமாக! ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் (லூக் 21:36) என்றார்.

இப்பொழுது உபதேசத்தில் தெளிவு பெற போதுமான ஆதாரங்களை உங்களுக்குக் கொடுத்துள்ளேன். ஆரோக்கியமான உபதேசத்தைப் பற்றிக் கொண்டு மணவாளன் இயேசுகிறிஸ்துவை மத்தியவானில் சந்திக்க ஆயத்தப் படுவோமாக! ஆமென்.

# 3

# மணவாட்டி எப்படிப்பட்டவள்?

பழங்காலத்தில் மணவாளனுக்கு பெண்தேட தங்கள் கால்களில் போட்ட பாதரட்சை கிழிந்து போகும் வரைக்கும் நடந்து நடந்து பெண் தேடுவார்களாம். ஏன் அப்படி தேடுகிறார்கள்? என்று கேட்டால் அது ஆயிரங்காலத்துப் பயிர் என்பார்கள். அதாவது ஆயிரக்கணக்கான வருசங்களுக்கு பல தலைமுறைகளை காண வேண்டிய பெண் பல நற்குணங்களையுடையவளாய் இருக்க வேண்டும் என்பதில் கருத்தாய் இருந்தார்கள்.

தற்காலத்தில் அநுதின தினசரிப் பேப்பர்களில் விளம்பரம் செய்து பெண் தேடுகிறார்கள். சிலர் தரகர்கள் மூலம் பெண் தேடுகிறார்கள். சில போதகர்கள் பெண், மாப்பிள்ளை தேடுவதிலேயே ஆயுட்காலத்தை செலவிடுபவரும் சில வேளைகளில் வரதட்சணையில் தசம பாகம், கமிஷன் கேட்டு வாங்குவோரும் உண்டு.

பரலோக மணவாளனுக்கு ஏற்ற மணவாட்டியைப் பரிசுத்த ஆவியானவரே தேடுகிறார். ஏற்ற மணவாளியைக் கண்டு பிடிக்கிறார். முதலாவது சுத்திகரிக்கிறார். எஸ்தர் 2:12, பின்பு ஜோடிக்கிறார். அதற்குப்பின்பு, ஆவியும், மணவாட்டியும் வா என்பார்கள். வெளி 22:17, அதற்குப் பின்பு இயேசுகிறிஸ்து சீக்கிரம் வருவார். வெளி 22:20. மத்திய வானத்திலே கலியாணம் நடக்கும். எனவே பரலோக மணவாளனுக்காக ஆயத்தப்படும் மணவாட்டி எப்படிப்பட்டவள் என்பதற்கு ஏழு காரியங்களை இந்த உன்னதப் பாட்டிலிருந்து பார்ப்போம்.

## 1. கருப்பாயிருப்பவள்:

ஆத்தும மணவாளன் இயேசுவுக்கு ஆயத்தப்படும் மணப் பெண் சிவப்பானவள் அல்ல. அவள் கருப்பாயிருப்பவள் என்று

உன்னதப்பாட்டு சொல்கிறது. எருசலேமின் குமாரத்திகளே, கேதாரின் கூடாரங்களைப் போலவும் சாலமோனின் திரைகளைப் போலவும் நான் கறுப்பாயிருந்தாலும் அழகாயிருக்கிறேன் என்று சூலமித்தியாள் (உன் 1:5) சொல்கிறாள்.

வேதாகம சரித்திரப்படி கேதார் என்பவன் இஸ்மவேலின் இரண்டாவது மகன். இவர்களுடைய தொழில் ஆடுமேய்ப்பது ஆகும்; (ஆதி 25:13) (சங் 120:5) ஏசா 60:7 இவர்கள் கூடாரங்களில் வாசம் பண்ணுவார்கள். இவர்களுடைய கூடாரம் கருப்பாயிருக்கும். இது போலவே சாலமோன் ராஜாவின் திரைகளும் கருப்பாயிருக்கும். இதைப் போலவே சூலமித்தியாளும் கருப்பாயிருந்தாள்.

இவள் கருப்பாயிருந்தது மட்டுமல்ல. நான் கருப்பாயிருக்கிறேன் என்று ஒத்துக் கொண்டது இன்னும் வியப்பாயிருக்கிறது. கருப்பு என்பது பாவத்தைக் குறிக்கிறது. பாவியின் நிலவரம்தான் கருப்பு, ஏசாயா தீர்க்கதரிசி தேவ தரிசனம் கண்டபோது ஐயோ! நான் அதமானேன். அசுத்த உதடுகளுள்ள மனுஷன். அசுத்த உதடுகள் உள்ள ஜனங்களின் நடுவே வாசமாயிருக்கிறேன் ( ஏசா 6:9) என்று கதறினான். ஏசாயா தீர்க்கதரிசி தன்னுடைய ஆவிக்குரிய நிலைமை கருப்பு என்பதை உணர்ந்தான். ஒத்துக் கொண்டான். அறிக்கையிட்டான். விட்டுவிட்டான். தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொண்டான்.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இறக்கம் பெறுவான் (நீதி 28:13) அன்பு நண்பனே! இன்று உன் பாவங்களைக் குறித்து உணர்வடைவாயா? ஒத்துக் கொள்வாயா? நீ கறுப்பாயிருக்கிறாய் என்று நீ அறிக்கையிடுவாயா?

இன்று பலருடைய அனுபவம் வேறுவிதமாக இருக்கிறது. நான் வெள்ளையாயிருக்கிறேன் என்று நெற்றியில் எழுதிக் கொள்வோர் உண்டு. நான் சிவப்பாயிருக்கிறேன் என்று தங்களை வஞ்சித்துக்

கொள்வோர். உண்டு, அமெரிக்க தேசத்தில் T.V. யில் செய்தி கொடுத்த உலகப் பிரசித்தி பெற்ற சுவிசேஷகர் சுமார் 10 ஆண்டுகளாக குறிப்பிட்ட ஒரு ஓட்டலில் ஒரு வேசிப் பெண்ணோடு அடிக்கடி போய் தங்கினார். தன் மனைவி பின்னைகளுக்கு, திருச்சபையாருக்கு இந்தக் காரியம் தெரியாது என்று தன்னை வஞ்சித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் அவர் பிடிபட்டார். உலகம் முழுவதிலுள்ள செய்திதாள்களில் அவரின் போட்டோவும் அவரின் பாவமும் வெளிப்படுத்தப்பட்டது. தன் மனைவி, பிள்ளைகள் மத்தியில், தான் அங்கம் வகித்த சபையார் மத்தியில் தான் ஒரு பாவி (தான் கருப்புாயிருக்கிறேன்) என்று அறிக்கையிட்டார். மன்னிப்புக் கேட்டார்.

எனதருமை ஊழியரே, தேவ ஜனங்களே! இன்னொருவர் வந்து உன்னைப் பாவி என்று சொல்லும் முன்பு நீயே உன்னைப் பாவியென்று உணர்ந்து மன்னிப்பு கேட்டு கர்த்தரிடம் மன்றாடி ஜெபி. ஏசாயாவைப் போல நீயும் கதறு. நான் கருப்பாயிருக்கிறேன் என்று அறிக்கையிட்ட சூலமித்தியாளைப் பார்த்து நீ ரூபவதி (உன் 1 : 10) என்று நேசர் புகழ்ந்தார். நீ ஒரு பாவி என்று அறிக்கையிட்டால், கர்த்தர் உன்னைப் பார்த்து நீ பரிசுத்த மானாய் ஏசா 6 : 7. உன் பாவம் நிவர்த்தியானது என்பார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் உன்னைக் கழுவும். அப்பொழுது நீ சுத்தமாவாய். வெண்மையாவாய். ஏசா 1:18, கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக முதலாவது நமக்கு வரவேண்டிய தகுதி என்னவென்றால் நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்று பரிசுத்தமாகவேண்டும்.

## கதறுபவள் :

சாலமோன் ராஜா தேடிய நேசமணவாட்டியானவள் தன் நேசரை நோக்கி ''என்னை இழுத்துக் கொள்ளும், உமக்குப் பின்னே ஓடி வருவோம்'' என்று கதறுபவளாக, ஜெபிக்கிறவளாக இருந்தாள். (உன் 1 : 4) என் பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் ஒருவனும் தானாய் என்னிடத்தில்

வரமாட்டான்'' என்று இயேசு சொன்னார். எனவே நேசரை நெருங்குவதற்கு நேசரே தன்பக்கமாய் இழுக்கவேண்டும் என்று கதறினாள்.

இரட்சிக்கப்பட்ட அனுபவத்தில் இவளுக்கு சுயதிருப்தி கிடையாது. இன்னும் தன் ஆத்தும நேசரோடு நெருங்கிய உறவு வேண்டும் என்று வாஞ்சித்தாள். எனனேதான் ''என்னை இழுத்துக் கொள்ளும்'' என்று கதறி ஜெபித்தாள். தேவ ஜனமே! இரட்சிக்கப்பட்ட மனந்திரும்பிய, பாவ மன்னிப்பு பெற்ற நீ கர்த்தருடைய வருகையில் காணப்பட ஜெப ஆவி உள்ளவனாய் இருக்க வேண்டும். (லூக். 21 : 36)

என்னை இழுத்துக் கொள்ளும் (Draw me) நாங்கள் உமக்குப் பின்னே ஓடி வருவோம் என்பதில் நாம் ஒரு சத்தியத்தை விளங்குகிறோம். மணவாட்டி தன் மணவாளனை நெருங்கி ஜீவித்தால் அவள் மூலம் அவளுக்குப் பின்னே ஒரு கூட்டம் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு ஆத்தும நேசரை அண்டிக் கொள்வார்கள் என்று நாம் விளங்குகிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று அப் 16 : 31. இதைத்தான் உறுதிப்படுத்துகிறது. சமாரிய ஸ்திரி பாவ வாழ்க்கையிலிருந்து, மனந்திரும்பி பரிசுத்தவாட்டியானாள். அவள் பின்னால் அந்த சமாரிய பட்டணம் முழுவதும் கிறிஸ்துவுக்குள் நெருங்கி விசுவாசிகளானார்கள் (யோவான் 4 : 39).

ஆசாரியன் என்ற வார்த்தைக்கு (to Draw near) தேவனை நெருங்கி ஜீவிக்கிறவன் என்று அர்த்தம். ஆசாரியன் பலிபீடத்தைத் தாண்டி பரிசுத்த ஸ்தலத்தை நெருங்கி கிருபாசனம் வரை நெருங்கி தேவனுக்கு சமீபமாய் செல்கிறவன். இன்று கர்த்தருடைய ஊழியர்கள் ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும், துதியினாலும் ஸ்தோத்திரத்தினாலும் தேவனை நெருங்கி ஜீவித்தால் ஆத்துமாக்கள் திரள் திரளாய் நமக்குப் பின்னே ஓடி வருவார்கள்.

தேவ பிள்ளைகளே! தேவ ஜனங்களே! சபையின் மூப்பர்களே! ஜெபக்குழு தலைவர்களே! புதிய விசுவாசிகளே நீங்களும் கிருபாசனத்தை நெருங்க முடியும். நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத் தண்டையில் சேரக் கடவோம் (To draw near - new open Bible) நெருங்கக் கடவோம் (எபி 4 : 16) என்று உங்களுக்கும் அழைப்புக் கொடுக்கிறார். எனவே சூலமித்தியாளின் கதறுதல் ஒவ்வொரு ஆசாரியனுடைய கதறுதலாக மாறட்டும். ஒவ்வொரு ஆசாரியனுடைய கதறுதலாக மாறட்டும்.. என்னை இழுத்துக் கொள்ளும் என்று நாம் ஜெபித்தால் நமக்குப்பின்னே கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் கர்த்தரண்டையில் சேர்க்கப்படுவார்கள். முடிவாக கிறிஸ்துவுக்கு மணவாட்டியாகவும் மாறிவிடலாம்.

சூலமித்தியாளின் கதறுதலுக்கு அவளுடைய நேசர் பதில் செய்தாரா? பதில் கொடுத்தார். என் நேசர் என்னைத் தமது அறைகளில் அழைத்துக் கொண்டுவந்தார். உன் 1 : 4 என்று மகிழ்ச்சியோடு மணவாட்டி தன் ஜெபத்திற்கு பதிலைப் பெற்றுக் கொண்டாள். தேவ ஜனமே! உன் ஜெபங்களுக்கெல்லாம் பதிலாக சீக்கிரமாய் மணவறை திறக்கப்படும். நீ மணவறைக்குள் பிரவேசிப்பாய். கதவும் அடைக்கப்படும் என்று கர்த்தர் சொல்கிறார். மத் 25 : 10

## 3. களிகூறுபவள் :

மணவாட்டியின் மூன்றாவது தகுதி அவள் தன் ஆவிக்குரிய யாத்திரையில் களிகூறுபவளாக இருக்க வேண்டும். "நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம் (உன் 1 : 4) என்றே மணவாட்டி சொல்கிறாள். ஆவிக்குரிய ஜீவியத்தை தொடங்குபவர்களுக்கு இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் எடுத்த உடனேயே மனமகிழ்ச்சியை ஈவாக தேவன் தருகிறார். அப் 16 : 34, இந்த மனமகிழ்ச்சி முதலாவது நமது உள்ளத்திலும் பின்பு நமது

இல்லத்திலும் பின்பு நமது அலுவலகங்களிலும் நதிபோல பாயவேண்டும். முடிவாக நமது ஓட்டத்தை முடிக்கும் போது சந்தோசத்தோடே ஓட்டத்தை முடிக்க வேண்டும் (அப் 20 : 24) இதுவே ஆதிசபையின் அனுபவமாக இருந்தது. பவுல் அப்போஸ்தலனின் அனுபவமும் அப்படியே இருந்தது.

ஆனந்தமே பரமானந்தமே - இயேசு
அண்ணலை அண்டினோர்க்கு ஆனந்தமே

என்ற பாடலை யாவரும் தலையசைத்து பாடினாலும் தாரை தப்பட்டை முழங்க கைதட்டி குதித்து சபையிலே ஆடினாலும் பலருடைய உள்ளம் சகாரா பாலைவனமாக வறண்டு கிடப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது. தேவஜனமே உள்ளான மகிழ்ச்சி நமது பரிசுத்தத்தை சார்ந்தே பொங்கிப் பெருக்கெடுத்து ஓடும்.

Sins multiply the soil of discouragement. பாவமானது நமது இதயத்தின் ஆழத்தில் சோர்வைப் பெருகப் பண்ணும் - என்று T.W. TOZER என்ற தேவபக்தன் சொல்கிறார். அதிகாலையில் எழும்பி ஜெபிக்கிற பழக்கம் உள்ளவர்களுக்கு அந்த நாள் முழுவதும் களிகூறுதலாகவே இருக்கும். கர்த்தாவே உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணும். அவர்களுக்கு தானியமும், திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோசத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோசத்தை என் இருதயத்தில் தந்தீர் (சங் 4 : 6, 7) என்று தாவீது கூறுகிறார். இதே தாவீது மாம்ச இச்சைக்கு இடம் கொடுத்த போது தெய்வீக சந்தோசத்தை இழந்தார். சங் 51 : 12, மீண்டும் அந்த இரட்சண்யத்தின் சந்தோசத்திற்காய் கதறினார்.

நம்நாட்டு பிரதமர் நரசிம்மராவைக்குறித்து அரசியல் வாதிகள் விமர்சிக்கும்போது ''சிரிப்பைத் தொலைத்துவிட்டவர்'' என்று கூறுகிறார்கள். இன்று நம்முடைய சபைகளில் எத்தனையோ பேர் சிரிப்பைத் தொலைந்து விட்டார்கள். சிலருடைய சந்தோசமும், சிரிப்பும் மத்திய பிரதேசத்தில் உள்ள சம்பல் பள்ளத்தாக்கிலே தொலைந்து விட்டது. சம்பல் பள்ளத்தாக்கிலே தொலைந்து

போனதை திரும்பவும் எடுக்கமுடியாது.

இழந்துபோன சந்தோசத்தை திரும்பவும் பெற்றுக் கொள்ள சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த யூதா ஜனங்கள் அந்நாளிலே மிகுதியான பலிகளைச் செலுத்தினார்கள். தேவன் தங்களுக்கு மகா சந்தோசத்தை உண்டாக்கினதினால் மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஸ்திரிகளும், பிள்ளைகளுங்கூடக் களிகூர்ந்தார்கள். எருசலேமின் களிப்பு தூரத்திலே கேட்கப்பட்டது. நெகே 12:43, நீங்களும் உங்கள் ஜெபநேரத்திலும், ஆராதனை வேளைகளிலும் அதிகமான ஸ்தோத்திர பலிகளை செலுத்துங்கள். சந்தோசம் பெற்றுக் கொள்வீர்கள். களிகூறுபவளே மணவாட்டியாகப் பறந்து செல்லப் போகிறாள்.

**4. கற்புள்ளவள் :** ஆத்தும மணவாளன் இயேசு கிறிஸ்து தேடிச் சென்ற பெண் கன்னிகையாக இருந்தாள், ''ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்'' (உன் 1:3) என்று சூலமித்தியாள் பாடினாள். புதிய ஏற்பாட்டு சபையும் ''கிறிஸ்து என்னும் ஒரே புருசனுக்காக நியமிக்கப்பட்ட கன்னிகை'' என்று (11 கொரி 11:2) பார்க்கிறோம். உங்களைக் கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருசனுக்காக நான் நியமித்துள்ளேன்'' என்றே பவுல் எழுதுகிறார்.

மணவாட்டியானவள் கன்னிகை மட்டுமல்ல; கற்புள்ளவளாய் இருக்கிறாள். இன்று கன்னிகையாக இருக்கிறேன் (திருமணம் செய்யாதவர்கள்) என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு கற்பை இழந்தவர்கள் உண்டு. மனதாலும் கெடுக்கப்படாதவர்களே கற்புள்ளவர்கள் (11கொரி 11:3). சரீரத்தின்படி நம்முடைய வாழ்வில் பாவம் செய்யாமல் வாழ்வது மட்டுமல்ல மனதாலும், சிந்தனையினாலும், கற்பனையினாலும் கறை படாதவர்களே கற்புள்ளவர்கள். கற்பு என்பது திருமணம் செய்யாத நிலை என்று சில பக்தர்கள் பறை சாற்றுகிறார்கள். அது புத்தமார்க்கத்தின் புளித்துப் போன உபதேசம். ஆனால் கிறிஸ்தவ மார்க்கத்தின் உபதேசமானது நீங்கள் திருமணம் ஆனவரோ? அல்லது திருமணம்

ஆகாதவரோ? யாராயிருந்தாலும் உன் இருதயத்திலே, உன் பார்வையிலே விபசாரம் இல்லாமல் ஜீவிப்பதே கற்பு என்று இயேசுகிறிஸ்து சொல்கிறார் (மத் 5:27, 28) இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவும் கூடாது(எபே 5:3.) என்பதே பரிசுத்தவான்களுக்கு ஏற்ற நடக்கை. பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுவதே(1 தெச 5:22.)

கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்கும் திருச்சபைக்கு தேவன் தரும் கட்டளையாகும். இப்படிப்பட்ட கன்னிகைகளையே சமாதானத்தின் தேவன் முற்றிலும் பரிசுத்த மாக்குவார் என்று அடுத்த வசனத்திலே ஆவியானவர் சொல்கிறார்.

கன்னிகையின் பிரதானமான சுபாவம் அவள் மறைந்திருப்பதுதான். மறைந்திருக்கும் சுபாவம் கன்னிகைகளுக்கே உரியது. என் ஆத்துமா ஆலயப் பிரகாரங்களில் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது. என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும் தகைவில்லான் குருவிக்கு தன் குஞ்சிகளைவைக்கும் கூடும் கிடைத்ததே (சங் 83:2,3) என்று தேவன் தனக்கு கொடுத்த மேய்ப்பனின் கையிலும், சபையில் ஐக்கியத்திலிருந்து பிறர் கண்ணில் படாமல் மறைந்திருந்து ஜீவிப்பவளே கன்னிகையாவாள். ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரவேண்டும் என்ற வாஞ்சையில் ஊர் ஊராக ஓடாதே! ஆத்துமாக்கள் அழிகிறதே என்று கைப்பிரதிப்பையை தோளில் போட்டுக் கொண்டு கிராமம் கிராமமாக ஊர் சுற்றி நீ அழிந்து போகாதே. ஒழுங்கில்லாதவர்களுக்கு புத்தி சொல்கிறேன் என்று வீடு வீடாய் விசிட்டிங் சென்று ஊர் வம்பு பேசி உன்னைக் கெடுத்துக் கொள்ளாதே. கர்த்தர் கொடுத்த ஐக்கியத்தில் மறைந்திருந்து தாழ்மையோடு ஜீவித்துப் பழகு. நீ மணவாட்டியாய் உயர்த்தப்படுவாய்.

இயேசுகிறிஸ்து தன் வீட்டிற்கு துக்கம் விசாரிக்க வருகிறார் என்று அறிந்தவுடனே மார்த்தாள் தன் இடத்தைவிட்டு எழுந்து ஊருக்கு வெளியே இயேசுவை ஓடிப்போய் சந்தித்தாள். மார்த்தாள்

சந்தித்த இடத்திலேயே இயேசு நின்றார்.

ஆனால் ''போதகர் உன்னை அழைக்கிறார்'' என்று மற்றவர்கள் தன்னிடத்தில் வந்து சொல்லும்வரை கண்ணீரோடு மரியாள் தன் ஸ்தானத்தில் காத்திருந்தாள். வீட்டிற்குள்ளேயே மறைந்திருந்தாள். இயேசுகிறிஸ்து அவளைத் தேடி அருகில் வந்தார். மரியாளின் கண்ணீரைக் கண்டதும் இயேசுவும் கண்ணீர் வடித்தார். லாசருவை உடனே ஊயிரோடு எழுப்பினார். அந்த லாசருவின் நிமித்தம் யூதர்களில் அநேகர் மனந்திரும்பி விசுவாசிகளானார்கள். யோவான் 11 : 45.

தேவ சபையே! உன் ஸ்தானத்தில் நீ மறைந்திருந்து ஜீவித்துப் பழகு, பிறசபையின் ஊழியர்கள் பார்வையில் பட்டு புகழையும் பாராட்டையும் பெறும்படி விரும்பாதே. உன் ஜெபம், உபவாசம், பரிசுத்தம் ஆகியவற்றைப் பிறர் பார்வையில் காட்டாதே. மரியாளைப் போன்று மறைந்திருக்கும் கன்னிகைகள் 100பேர் சபைகளில் எழும்பினால் நம் தேசம் தலைகீழாக மாறிவிடும். பல எழுப்புதல் தேசத்தைப் பட்சித்துவிடும்.

## 5. காத்திருப்பவள் :

கிறிஸ்துவாகிய மணவாளனுக்காக ஆயத்தப்படும் சபையே! கர்த்தர் வருகை இன்னும் தாமதமாகிக் கொண்டிருக்கிற படியால் அவசரப்படாமல் அவர் வருகைவரைக்கும் அவரது வாசற்படியில் காத்திருக்க வேண்டும். மோசே மலையிலிருந்து, இறங்கி வரத் தாமதித்த போது இஸ்ரவேலர் தாங்கள் இருதயத்திலே எகிப்திற்கு திரும்பினார்கள்(யாத் 32 : 1, அப் 7 : 39). மணவாளன் வரத்தாமதித்த போது புத்தியுள்ள கன்னிகைகள் தூங்கிவிட்டார்கள். புத்தியில்லாத கன்னிகைகள் எண்ணெய் வாங்குவதற்காய் ஊருக்குள் போய்விட்டார்கள்.

கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து (வருகையில்) எழும்புவார்கள். (ஏசா 40 : 31) என்று இரகசிய வருகையில்

நடக்கப் போகும் சம்பவத்தை தீர்க்கதரிசனமாய் ஏசாயா சொல்கிறார்.

எனவேதான் என் ஆத்தும நேசரே! உமது மந்தையை எங்கே மேய்த்து, அதை மத்தியானத்திலே எங்கே மடக்குகிறீர் எனக்குச் சொல்லும் உமது தோழரின் மந்தைகள் அருகே அலைந்து திரிகிறவளைப் போல நான் இருக்கவேண்டியதென்ன? (உன் 1 : 7) என்று சூலமித்தியாள் அங்கலாய்த்தாள். அதற்கு நேசரின் பதிலைப்பாருங்கள். ஸ்திரிகளில் ரூபவதியே! அதை நீ அறியாயாகில், மந்தையின் காலடிகளைத் தொடர்ந்து போய் மேய்ப்பர்களுடைய கூடாரங்களண்டையிலே உன் ஆட்டுக் குட்டிகளை மேயவிடு (உன் 1 : 8) என்றார்.

ஆகவே மணவாட்டி அலையக் கூடாது. அவள் காத்திருக்கவேண்டும். கர்த்தருடைய வருகை தாமதம் ஆகிறதே என்று அங்கும் இங்கும் அலைந்து திரியக் கூடாது. அதுவுமல்லாமல் ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமும் கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்கு காத்திருந்து தவிக்கிறோம். (ரோமர் 8 : 23) என்றே சொல்லப்பட்டுள்ளது.

பூலோக விவாகத்தில் நிச்சயதார்த்தம் நடந்தபிற்பாடு திருமணநாள் வரைக்கும் மணவாளனுக்காய் மணவாட்டி காத்திருப்பது போல நாமும் இரட்சிக்கபட்டு, அபிஷேகம்பெறும் போது நாம் தேவனுக்குச் சொந்தமாகிறோம். ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார். (Sealed). எபே 1 : 14; எபே 4 : 30. அன்று முதல் கர்த்தர் வருகை வரை தேவன் தந்த அபிஷேகத்தை இழந்து போகாமல், கர்த்தர் போட்ட முத்திரையை அழித்துவிடாமல் பரிசுத்தமாய் காத்திருக்க வேண்டும்.

நாம் காத்திருக்கிறவர்களானால் நமது பிரயாணங்களில் பஸ் நிலையத்தில் காத்திருக்கும் போது பஸ்வரத் தாமதிக்கும்போது நமக்கு வரும் முறுமுறுப்புகள் எத்தனை. கை கால்களை உதைத்துக் கொண்டு அங்கும் இங்கும் அலைந்துதிரிந்து துரிதப்படும் சுபாவங்களைப் பாருங்கள். எனக்காக நீ ஏழுநாள் காத்திரு என்று

சாமுவேல் தீர்க்கதரிசி சொல்லும் போது காத்திருக்க முடியாமல் அவசரப்பட்டு பலி செலுத்திய சவுல் அபிஷேகத்தை இழந்து போனாரே (1சாமு 10:8; 13:8) இன்று ஊழியத்திற்கு வரும் வாலிபர்கள் பத்து ரூபாய்க்கு ''பாஸ்டர் X'' என்று ரப்பர்ஸ்டாம்பு செய்து கொண்டு ஊழியக்காரராகிவிடுகிறார்கள். பாஸ்டர் ஆர்டினேசன் கிடைக்கும்வரை காத்திருக்க மனமில்லை. வரங்கள் ஒன்றும் இல்லாதிருந்தும் பற்பல வரங்கள் தங்களிடம் உண்டு என்று விளம்பரம் செய்கிறார்கள். தேவபிள்ளையே! கர்த்தர் ஏற்ற காலத்தில் உன்னை உயர்த்தும்படிக்கு தேவனுடைய கரத்தின் கீழ் அடங்கியிரு. உன் மேய்பார்களின் கையின் கீழ் அடங்கியிரு. (1 பேதுரு 5:6. எபி 13:17) கர்த்தருக்காக காத்திருப்பவளே மணவாட்டியாகிப் பறக்கமுடியும்.

## 6. காவற்காரியாயிருப்பவள்:

சாலமோன் ராஜாவின் மணவாட்டியாகிய சூலமித்தியாள் திராட்சத் தோட்டத்திற்கு காவற்காரியாக இருந்தாள். என் தாயின் பிள்ளைகள் என் மேல் கோபமாயிருந்து, என்னைத் திராட்சத்தோட்டங்களுக்குக் காவற்காரியாக வைத்தார்கள் (உன் 1:6) என்று சொல்கிறாள்.

நமது ஆத்ம மணவாளன் இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாகிய நீயும் நானும் காவற்காரர்கள் தான். ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாய் இருங்கள் (அப் 20:28) என்று எபேசுவில் உள்ள மூப்பர்களுக்கு பவுல் சொல்கிறார்.

★ நாம் நமது சகோதரர்களுக்கு காவலாளிகள், ஆதி 4:9.

★ நாம் நமது தேசத்துக்கு காவலாளிகள். எசே 3:17.

★ நாம் நமது சபைக்கு காவலாளிகள். உன் 1:6.

★ நமக்கு நாமே காவலாளிகள் சங் 119:9; 1 தீமோ 5:22.

என்று கர்த்தர் சொல்கிறார். இந்த உத்திரவாதத்திலிருந்து தேவ ஜனமே நீ நழுவி ஓடாதே. எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்திலே கூப்பிடு. ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல் ஊற்றிவிடு. எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப் போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு (புல 2:19) என்று காவற்காரர்களாகிய நமக்கு கர்த்தர் சொல்கிறார். வாலிபனே நீ ஒரு காவற்காரன் தான். ஜெபக்குழு தலைவனே! தலைவியே நீ காவற்காரன்தான். அபிஷேகம் பெற்ற அத்தனைபேரும் காவற்காரர்தான். சபையே விழித்தெழு, சரித்திரம் மாறிவிடும். உன்னைச் சந்திக்கவே இயேசு வருகிறார்.

## 7. கர்ஜிப்பவள்:

சூலமித்தியாளை சந்தித்த சாலமோன் ராஜா அவளைப் புகழும்போது ''என் பிரியமே பார்வோனுடைய இரதங்களில் பூண்டிருக்கிற பரிகள் (குதிரை) பவுஞ்சுக்கு ஒப்பிடுகிறேன் (உன் 1:9) என்று சொன்னார். குதிரைகளின் குணாதிசயங்களில் ஒன்று கர்ஜனையாகும். யுத்தத்தின் முன்னணியில் எக்காளம் தொனிக்கும்போது அது நிகியென்று கனைக்கும் (கர்ஜிக்கும்). யோபு 39:25. எந்தப் பிரச்சனைக்கும், எந்த எதிரியைக் கண்டும் பின்வாங்காது (நீதி 30:30, 31) (Never give up) இரதங்களில் பூட்டப்பட்ட குதிரை ஒன்றுக் கொன்று ஐக்கியமாகவும் இருக்கும். சீரான முறையில் வளர்க்கப்பட்டு, பயிற்சிக்கப்பட்டிருக்கும். குதிரைகளின் தொண்டையில் குமுறலை தேவன் வைத்துள்ளார். சரீரத்தில் வீரியத்தை தேவன் கொடுத்துள்ளார். (யோபு 39:19).

பிரிட்டிஸ் சாம்ராஜ்ஜியத்தின் பிரதமர்களில் தலைசிறந்தவர் என்று போற்றப்பட்ட சர். வின்ஸ்டன்ட் சர்ச்சில் தன் நாட்டு வீரர்களைப் பார்த்து இரண்டாம் உலக யுத்தத்திலே சொன்ன வார்த்தைதான் ''ஒரு போதும் பின் வாங்காதே''. ஒரு நாளும் சத்துருவுக்கு இடம் கொடாதே'' (Never give up) என்ற பொன் மொழியாகும்.

முதலாம் உலக யுத்தத்தில் இந்தப் பொன்பொழியை கர்ஜித்தவர் ''ஜெனரல் ஆலன் பீ'' என்பவராகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் பிரதான தளபதியகிய இந்த யூதன் எருசலேமைக் கைப்பற்றும்படி யுத்தத்திற்கு சென்றான். எகிப்தைக் கடந்து, அரேபியாவின் பாலைவனங்களைக் கடந்து காசா பட்டணத்தைக் கைப்பற்றினால்தான் பின்பு எருசலேமுக்கு அந்நாளில் செல்ல முடியும்.

காசா பட்டணம் முஸ்லிம்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. சுற்றிலும் 2000 மைல்களுக்கு ''காக்டஸ்'' என்ற சவுக்கு மரங்களைப் போன்ற அடர்ந்த தோப்பிற்குள் அந்தக் காசா பட்டணம் இருந்தது. ஆலன் பி யின் வீரர்கள் 6 மாதகாலமாக காசா பட்டணத்தை முற்றிகை போட்டிருந்தார்கள். யூதர்களின் ஆகாரம் குறைந்தது, குடிதண்ணீரும் குறைந்தது. ஆலன் பியின் வீரர்கள் தங்கள் சுய தேசத்துக்கு திரும்ப எண்ணினார்கள். அந்நேரத்தில் ஆலன் பீ தன் வீரர்களுக்குச் சொன்ன பொன்மொழிதான்.

"Never give up".

''பின்வாங்காதே, தளர்ந்து போகாதே, சோர்ந்து போகாதே'' என்றார். அப்பொழுது காசாபட்டணத்திலும் குடி தண்ணீர் இல்லாமல் தவித்தார்கள். காசாபட்டணத்திலே திறப்பு உண்டானது. அதற்குள் ஜெனரல் ஆலன்பியின் வீரர்கள் உள்ளே சென்று காசா பட்டணத்தை முறியடித்து பின்பு எருசலேமுக்கு சென்று அதன் பாதிப்பட்டணத்தைப் பிடித்தார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தில் இஸ்ரவேல் தேசமாக, அது மலர்ந்தது. இன்று நாமும் கிறிஸ்துவின் சாம்ராஜ்ஜியத்தை இந்த உலகில் நாட்ட ஆவிக்குரிய யுத்தத்தில் இறங்கியுள்ளோம். தேவ ஜனமே Never give up என்று கர்ஜித்துக் கொண்டே முன்னேறு. குதிரையானது நிகியென்று கனைப்பதுபோல் கர்ஜித்துக் கொண்டு சாத்தானோடு யுத்தம் செய். இருளின் ராஜ்ஜியம் நம் தேசத்தில் மறைந்துவிடும். இயேசு கிறிஸ்துவின் அன்பின் ராஜ்ஜியம் உன்னைக் கொண்டும் என்னைக் கொண்டும் ஸ்தாபிக்கப்படும். கிறிஸ்துவின் மணவாட்டியானவள் வெற்றியின் வார்த்தைகளைக் கர்ஜிப்பவளாக இருக்க வேண்டும்.

# 4

# மணவாட்டியின் பருவகாலங்கள்

பரிசுத்த வேதாகமத்தில் தெய்வீக திருமணங்கள் மூன்றைப் பார்க்கிறோம். முதலாவதாக தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாமுக்கு ஏற்ற துணையை தேவனே தேடினார். ஆதாமின் விலா எழும்பிலிருந்து ஏவாளை உருவாக்கினார். அவர்களுடைய திருமணத்தை தேவனே நடத்திவைத்தார்.

இரண்டாவதாக ஆபிரகாமின் ஒரே பேறான குமாரன் ஈசாக்குக்கு ஏற்ற மணவாட்டியைத் தேடும்படி ஊழியக் காரனாகிய எலியேசர் சென்றார். பல பரிட்சைகள் வைத்து சோதித்துப் பார்த்து ரெபெக்காளை ஏற்ற மணவாளியாக கண்டு அவளை அழைத்து வந்தார். அவள் ஒட்டகத்தில் ஏறி மணவாளனை சந்திக்க வந்தாள். அவளின் பிரயாணத்தில் பல அனுபவங்களைக் கண்டிருப்பாள்.

மூன்றாவதாக நேச மணவாளன் இயேசுகிறிஸ்துவுக்காக இந்தப் பூலோகத்தில் மணவாட்டி சபை உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த சபையும் இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்ற நாள்முதல் மணவாளனை சந்திக்கும் நாள் வரை பல ஆவிக்குரிய அனுபவங்களை சந்திக்க வேண்டியதுள்ளது. உன்னதப்பாட்டில் மணவாட்டிக்கு நிழலாய் ஜீவித்த இவள் நான்கு பருவ காலங்களை சந்திக்கிறாள். நான்கு தோட்டங்களை சந்திக்கிறாள். நான்கு மலைகளை சந்திக்கிறாள். அன்பின் நான்கு அனுபவத்தை சந்திக்கிறாள். அதற்குப்பின்பே மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்டாள். இந்த அதிகாரத்தில் மணவாட்டி சந்தித்த நான்கு பருவகாலங்களைப் பார்ப்போம்.

## 1. வசந்த காலம் :

மணவாட்டியாகிய சூலமித்தியாள் முதலாவது முன்மாரி மழைக்காலத்தை சந்தித்தாள். மாரிக்காலம் சென்றது (உன் 2 : 11) என்று நேசர் சொன்னார். பாலஸ்தீன தேசத்தில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் முன்மாரி மழைபெய்யும். நாம் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்ற நாட்கள் நமது வாழ்வில் முன்மாரி மழை பெய்யும் காலமாகும். முன்மாரி மழை பெய்தவுடன் தேசத்தில் விதை விதைக்கப் போவார்கள். இது நமது ஆவிக்குரிய வாழ்வின் தொடக்கமாகும். நாம் ஒருமுறை இரட்சிக்கப்பட்டது மட்டுமல்ல; அநுதினமும் அந்த இரட்சிப்பில் புதுப்புது அனுபவங்களை மாறிமாறி அனுபவிக்கிறோம். நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்று (யோவான் 4 : 14) இயேசு சொன்னார்.

முன்மாரி மழை பெய்யும்போது தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர் பாய்ச்சுகிறீர். தண்ணீர் நிறைந்த தேவ நதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர். இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்கு தானியத்தை விளைவிக்கிறீர். அதின் வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால்களுக்கு தண்ணீர் இறைத்து, அதை மழைகளால் கறையப்பண்ணி (Softeth) அதன் பயிரை ஆசீர்வதிக்கிறீர் (சங் 65 : 9, 10). என்கிறார் தாவீது.

முன் மாரி மழை பெய்யப் பெய்ய அதன் மழை நீரானது நிலத்தின் கடினத்தன்மயை மாற்றி மென்மையானதாக மாற்றுகிறது. இரட்சிக்கப்பட்ட நாம் நமது வாழ்வில் உள்ள கரடு முரடான சுபாவங்களிலிருந்து மறுரூபம் அடைந்து மென்மையான சுபாவம் உடையவர்களாக மாறவேண்டும்.

நாபால் என்ற மனுஷன் வார்த்தையிலும் செயலிலும் கடின சுபாவமுள்ளவராய் இருந்தார். பாம்பைப் போல சீறும் வார்த்தைகளால் கடினமுள்ளவராய் இருந்தார். அவனுடைய

நிலைமை பரிதாபம். ஆனால் அவன் மனைவியோ வார்த்தையிலும் மென்மையுள்ளவள். செயலிலும் கனிவுள்ளவள். எனவே நாபால் இறந்த பின்பு அவள் தாவீதுக்கு மணவாட்டியானாள். எனவே தேவபிள்ளையே முன்மாரி மழை தொடர்ந்து உன்மேல் பெய்யப் பெய்ய உன் சுபாவங்கள் கரைந்து கரைந்து மென்மையாகட்டும்.

சாலமோனின் குமாரன் 'ரெகோபெயாமும் வார்த்தையிலே கடின வார்த்தைகளைப் பயன்படுத்தினான். செயலிலும் கடின குணம் உள்ளவனாய் இருந்தான் 1ராஜா 12 : 14. அவன் இராஜ்ஜிய பாரம் இரண்டாக உடைந்தது. தேவ ஊழியரே! தேவ ஜனமே உங்கள் வார்த்தைகள் மென்மையாகட்டும். உங்கள் செயலும் கனிவுள்ளதாக, மென்மையாக மாறட்டும். இது ஒருமுறை நடக்கும் அனுபவம் மட்டுமல்ல. தொடர்ந்து நாள்தோறும் மாறி மாறி மென்மையாகிக் கொண்டே வருவதாக.

பூமியிலுள்ள நாளளவும் விதைப்பும், அறுப்பும், சீதளமும், உஸ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று வேதம் சொல்கிறபடியே நமது வாழ்விலும் இந்த பருவகாலங்கள் மாறி மாறி வரவேண்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமடைய வேண்டும்.

ராஜாக்களின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போலிருக்கிறது. அதைத் தமது சித்தத்தின் படியே அவர் திருப்புகிறார் என்று (நீதி 21 : 1) சொல்லப்பட்டபடியே நமது அனுபவங்களில் இந்தப் பருவ காலங்களின் அனுபவம் மாறி மாறி வருவதற்கு நாம் இடங் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலம் உண்டு. (பிர 3 : 1) எனவே முன்மாரி மழைக்காலத்தில் நமது சுபாவங்களில் மென்மை உண்டாக நம்மைத் தாழ்த்துவோமானால் நமது ஆவிக்குரிய வாழ்வில் ஐந்துவித ஆசீர்வாதங்களை இக்காலத்தில் வைத்துள்ளார்.

### a. பூமியிலே புஷ்பங்கள் காணப்படும் :

முன்மாரி மழை பெய்யும் முன்பு காடுகளில் வறட்சி தாண்டவமாடும். ஆனால் மழைபெய்தபின்பு பூமியிலே புஸ்பங்கள் காணப்படும். இதுபோல சில ஆண்டுகளுக்கு முன்பாக விசுவாசிகளைக் காண்பது அரிதாயிருந்தது. ஆனால் இப்பொழுதோ பட்டணங்களிலும், கிராமங்களிலும் திரளான விசுவாசிகளைக் காண முடிகிறது. திரளான ஊழியர்களைக் காணமுடிகிறது. எனவே என் பிரியமே எழுந்துவா என்று நம் நேசர் அழைக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டது என்று அறிகிறோம். உன் 2 : 10.

### b. குருவிகள் பாடும் :

குருவிகள் பாடுவதை நம் கேட்கவும் பார்க்கவும் முடிகிறது. ஆனால் அவைகளின் வார்த்தையும் அதன் அர்த்தமும் நமக்கு விளங்குவதில்லை. இப்படிப் போலவே பெந்தேகோஸ்தே நாளில் முன்மாரி மழை பெய்தது. மாடியில் கூடியிருந்த 120 பேரும் பரிசுத்த ஆவியில் நிறைந்து பற்பல பாஷைகள் பேசினார்கள். பண்டிகை கொண்டாட எருசலேமில் வந்திருந்த 17 தேசத்தார்களும் 120 பேர்கள் பேசிய அந்நிய பாஷைகளைக் கேட்டார்கள். ஆவியில் நிரம்பியபோது இறங்கிய அக்கினியைக் கண்டார்கள். ஆனால் அதன் அர்த்தம் அவர்களுக்கு விளங்கவில்லை. இதுவே குருவிகள் பாடும் அனுபவம். இன்று சபை பாகுபாடு இல்லாமல் எல்லா சபைகளுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுகிறார். எனவே என் பிரியமே! நீ எழுந்து வா என்று நம் நேசர் அழைக்கும் நேரம் நெருங்கிவிட்டது.

### c. காட்டுப்புறாவின் சத்தம் கேட்கப்படுகிறது :

புறாக்கள் கபடற்றது. இணைப்புறாவின்மேல் அன்புள்ளது. இணைப்புறாவைக் காணாமல் புலம்பி சத்தம் இட்டுக்

கொண்டேயிருக்கும். இன்று கர்த்தருடைய வருகையைப் பற்றிய வாஞ்சை பல தேவபிள்ளைகளுக்குள் கொழுந்து விட்டு எரிவதைக் காணமுடிகிறது. சபை பரிசுத்தமடைந்து பரலோகம் செல்ல வேண்டும் என்ற சத்தியத்தை ரூபகாரப்படுத்தி பேசும் பிரசங்கிமாரை ஏராளமாய்க் கர்த்தர் எழுப்பியுள்ளார். எனவே கர்த்தர் நம்மைப் பார்த்து என் பிரியமே நீ எழுந்து வா! என்று நம்மை அழைக்கும் நேரம் நெருங்கிவிட்டது என்று உணர்கிறோம். உன் 1 : 10.

**d. *அத்திமரம் காய்காய்க்கும் :***

நாம் முன்மாரி மழை பெய்யும் நாட்களில் நமது இரட்சிப்பைப் பெறுகிறோம். நமது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்ட பின்பு நமது நோய்களிலிருந்தும் நாம் இரட்சிக்கப்படுகிறோம். நம் நோய்களைக் கர்த்தர் குணமாக்கிவிடுகிறார். (சங் 103 : 2,3) இரட்சிப்பிலே தெய்வீக சுகம் இணைந்திருக்கிறது. எசேக்கியா ராஜா பிளவை வியாதியில் மரணத்திற்கு சமீபமாய் இருந்தபோது அத்திப்பழத்து அடையை நம் ஆண்டவர் போடச் சொன்னார். அப்பொழுது சுகமானார். இந்தப் பருவகாலமும் நமது வாழ்வில் மாறி மாறி வருவதை அனுபவிக்க முடியும். கர்த்தர் நம்மை வியாதிக்கு விலக்கி காப்பார். (Divine health) ஒருவேளை வயோதிபத்தின் பெலவீனமோ, சூழ்நிலையின் காரணமோ, வியாதிவந்தால் அப்பொழுதும் நம்மைக் கர்த்தர் குணமாக்குவார். (Divine Healing) ரோமர் 8 : 11. இந்த தெய்வீக சுகத்தின் அனுபவம் நமக்கு மாறி மாறி வாழ்நாள் முழுவதும் தொடரும்.

**e. *திராட்சக் கொடிகள் வாசனையும் பரிமளிக்கும் :***

திராட்சச் செடியானது தேவர்களையும் மனுஷர்களையும் மகிழப்பண்ணும் அனுபவம் வாய்ந்தது. முன்மாரி மழை பெய்து நாம் இரட்சிக்கப்பட்டவுடன் நமது சமுதாயத்தில் உள்ளவர்கள் நம் மூலம் மகிழ்ச்சியடைகிறார்கள். நமது பாவ பழக்கத்தால்

மனவேதனையடைந்த நமது பெற்றோர் நமது இரட்சிப்பின் நிமித்தம் சந்தோசப்படுகின்றனர். நமது நேசரும் மனமகிழ்ச்சி யுண்டாக்கும் என் பிரியமே! என்று நம்மை அழைக்கிறார். சவுல் நியாயப் பிரமாணத்தில் வைராக்கியமாயிருந்து கிறிஸ்தவ விசுவாசிகளை துன்பப்படுத்தின பொழுது பலரும் துக்கப்பட்டனர். ஆனால் அவர் இரட்சிக்கப்பட்டு பவுலாக மாறியபொழுது சபையார் சந்தோசப்பட்டு அவனிமித்தம் தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த அனுபவமும் நமக்கு தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் மாறி மாறி வரவேண்டும். கர்த்தர் வருகையில் நாம் சேர்க்கப்படும் வரை நமது ஆவிக்குரிய பக்திவாழ்க்கையினிமித்தம் இந்த உலகம் சந்தோசப்படும்படி நமது சாட்சியைக் காத்துக் கொள்ளவேண்டும். இன்று பல இந்துக்களும், கத்தோலிக்க மார்க்கத்தாரும் இந்த அனுபவத்தில் ஏராளமாய் இரட்சிக்கப்பட்டு விசுவாசிகளாகவும் ஊழியர்களாகவும் எழும்புவதைக் காணும்போது என் பிரியமே! நீ எழுந்து வா என நம் நேசர் நம்மை அழைக்கும் நேரம் நெருங்கிவிட்டது என்று உணர்கிறோம்.

## 2. குளிர்காலம் :

பாலஸ்தீனாவில் வரக்கூடிய இரண்டாவது காலம் பின்மாரி மழை காலம் அல்லது குளிர்காலம் என்று அறிகிறோம். இது ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் உண்டாகிறது என்று வேதப் பண்டிதர்கள் சொல்கிறார்கள். மழை பெய்து ஒழிந்தது உன் 2 : 11 (The Winter is Past) என்று நேசர் சொன்னார். மணவாட்டி சந்தித்த இரண்டாவது பருவகாலம் அடைமழைக் காலமாகும். பின்மாரி மழைக்காலமாகும். முன்மாரி மழையைப் போல 10 மடங்கு பெய்வது தான் பின்மாரி மழையாகும்.

அப். 2 ஆம் அதிகாரத்தில் முன்மாரிமழை பெய்தது. அப்பொழுது சுவிசேஷ விதை விதைக்கப்பட்டது சபைபிறந்தது. இன்று பின்மாரிமழை ஊற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. பயிர்

முற்றி அறுவடைக்கு ஆயத்தமாகவே பின்மாரி மழை பெய்கிறது. சபையாகிய மணவாட்டி கர்த்தருடைய வருகையிலே சேர்க்கப்படும் காலம் நெருங்கிவிட்டது என்று நாம் அறிகிறோம். எனவே இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் சிந்தித்து, தியானித்து, வருகைக்கு வாஞ்சிக்க வேண்டிய பருவ காலமே இரண்டாவது காலமாகும்.

அடை மழை பெய்யும் நாட்களில் ஒருவரும் வீட்டைவிட்டு வெளியே போகமுடியாது. மற்றவர்களும் நம்மைக் காண ஒருவரும் வரமாட்டார்கள். எனவே பின்மாரி மழை பெய்யத் துவங்கியவுடன் கதவைப் பூட்டிக் கொண்டு வீட்டுக்குள் தரித்திருந்து ஜெபம், உபவாசம், வேத தியானம் என்று வீட்டுக்குள்ளேயே தரித்திருக்க வேண்டிய அனுபவம் நமது இரண்டாவது அனுபவமாகும்.

முற்புறத்திலும் பிற்புறத்திலும் நெருக்கி உமது கரத்தை என்மேல் வைக்கிறீர் (சங் 139 : 5) என்று தாவீது சொல்கிறார். நெருக்கங்கள் வரும்போது மனித தயவை நாடி அங்கும் இங்கும் ஓடக்கூடாது. கதவைப் பூட்டிக் கொண்டு கர்த்தர் பாதத்தில் சில காலம் காத்திருந்தால் கர்த்தர் நம்மோடு பேசுவதைக் காணமுடியும். இந்த மாரிக் காலத்தில் நாம் வெளியே சென்றால் மழையே நமக்கு சேதத்தை உண்டு பண்ணும் இயற்கை சூழ்நிலையே நமக்கு விரோதமாக எழும்பும். நமக்கு அனுகூலம் செய்யும் மனிதர்கள், விசுவாசிகள், ஊழியர்கள் கூட நம்மை வெறுத்து பகைப்பார்கள். இப்படிப்பட்ட அனுபவம் நமக்கு பல நேரங்களில் உண்டாகும். உடனே இது நமக்கு அடைமழைக்காலம், நாம் வெளியே போகக்கூடாது. எவரையும் சந்திக்கக் கூடாது என்று தீர்மானம் எடுத்து வீட்டுக் குள்ளேயே அல்லது ஜெபவீட்டிலே ஜெபத்திலும் உபவாசத்திலும் நாம் நேரத்தை செலவிடவேண்டும். அப்படிச் செய்தபோது தாவீதுக்கு மூன்று அனுபவங்கள் கிடைத்தது.

உம்முடைய ஆவி சங் 139 : 7

உம்முடைய சமூகம் சங் 139 : 7

உம்முடைய ஆலோசனைகள் சங் 139 : 17

கிடைத்தாக எழுதுகிறார். எனவே தேவபிள்ளைகளே! மணவாட்டி சந்தித்த இரண்டாவது பருவகாலமும் நமது வாழ்வில் பலமுறை மாறி மாறி வரும். அப்பொழுதெல்லாம் மனிதரை நொந்து கொள்ளாமல், சூழ்நிலைகளை வெறுக்காமல், கர்த்தரிடம் முறுமுறுக்காமல் இருப்போமாக!

## 3. இலையுதிர்காலம் :

சூலமித்தியாள் சந்தித்த மூன்றாவது பருவகாலம் இலையுதிர்காலம் என்பதாகும். இது பாலஸ்தீனாவில் வரும் மூன்றாவது பருவகாலம். இது ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் உண்டாகும். இக்காலங்களில் திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும், சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள். நம்முடைய தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாக இருக்கிறதே (உன் 2 : 15) என்று நம் நேசர் சொல்கிறார்.

ஆவிக்குரிய சபையானது வளர்கிறது என்றால் அந்த சபைக்குள்ளே பிசாசானவன் குழப்பங்களையும் பிரச்சனைகளையும் கொண்டு வர முயற்சிப்பான். நமக்கு மிகவும் நம்பிக்கைகுரியவர்களைக் கொண்டே, மிகவும் முக்கியமான-வர்களாக சபையிலே விளங்குபவர்கள் மூலமாக தந்திரமாக இந்தக் குழிநரிகளும், சிறு நரிகளும் திராட்சதோட்டமாகிய சபைக்குள்ளே நுழைந்து சபையின் வளர்ச்சிக்கு விரோதமாக செயல்படும். பூவும், பிஞ்சுமாக வளர்கின்ற சபையிலே, புதிய புதிய ஆத்துமாக்கள் தீவிரமாய் சேர்க்கப்படும்போது இந்தக் குள்ள நரிகளுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

சிம்சோன் 300 நரிகளைப் பிடித்தான். இரண்டு இரண்டாக வாலோடு வால் சேர்த்துக் கட்டினான். தீப்பந்தங்களைக் கொளுத்திவிட்டான். அவைகள் பெலிஸ்தியர்களுடைய வெள்ளாண்மையை அழித்து நாசப் படுத்தியது. சத்துருக்களுடைய தேசத்தையே அழித்தது. நாம் நமது வாழ்விலும் சபையிலும்,

ஊழியத்திலும் எதிர் சூழ்நிலைகளை அனுகூலமாக திருப்ப பரிசுத்த அக்கினியில் நிரம்பவேண்டும். எதிராய் எழும்பும் மனிதர்களையும் அனுகூலம் செய்யும் ஆட்களாக மாற்றி அக்கினி அபிஷேகத்திலும், அன்பின் ஆவியிலும் நிரம்பவேண்டும். அப்பொழுது எதிரிகளின் (பிசாசின்) பாளையம் அழியும். நமது வாழ்வும், குடும்பமும், சபையும் பாதுகாக்கப்படும்.

அமெரிக்காவில் ஹென்னத் ஹேகின் என்ற தேவ மனிதன் தன் நண்பரின் ஊழியத்தைப் பற்றி ஒரு தரிசனம் கண்டாராம். வேகமாய் வளர்ந்து வரும் சபையின் மேய்ப்பனுக்கு அருகில் அவரின் நம்பிக்கைக்குரிய வாலிபன் ஒருவன் ஊழியத்துக்கு மிகவும் அனுகூலமாய் காணப்பட்டான். வாலிபர்கள் மத்தியில் ஊழியமும் செய்தான். அவனுக்குள் பரியாச ஆவி கிரியை செய்தது. பலரை அவனுடைய பேச்சினால் சிரிக்கவைத்தான். அவனுக்குள் ஒரு குரங்கு போன்ற ஆவி இருப்பதை ஹேகின் தரிசனத்தில் கண்டார். இந்தக் காரியத்தை அந்த போதகரிடத்தில் சொல்லி அவனைக் கண்டித்து வைக்க இவர் எண்ணினார். கர்த்தரோ அதைக் குறித்து அந்த பரியாச ஆவியை கட்டிப் போடு என்று சொன்னார். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அவனுக்குள் கிரியை செய்து கொண்டிருக்கும் பரியாச ஆவியை கடிந்து கொண்டபோது அவன் விடுதலை பெற்றான். அந்த ஊழியம் பாதுகாக்கப்பட்டது.

இவ்விதமாக மணவாட்டி சந்திக்கும் மூன்றாவது பருவகாலமாகிய இலையுதிர் காலத்தில் நமது தோட்டத்தில் சிறு நரிகள், குழிநரிகள் வராதபடிக்கு கவனமாயிருப்போமாக. நமது குடும்பத்தில், சபையில், இலையுதிரா மரம் போல இருக்க வேத வசனத்தில் இரவும் பகலும் தியானமாயிருப்போமாக! (சங் 1:3)

திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளைக் குறித்தும் சிறுநரிகளைக் குறித்தும் பிரைன் பெய்லி என்ற தேவ மனிதனுக்கு தரிசனத்தில் தேவன் விளக்கம் கொடுத்தாராம். ஒருதாயும் மகளும் தங்கள் தங்கள் குடும்ப சமாதானத்திற்காய் ஜெபிக்க வந்தார்களாம்.

அப்பொழுது தாயின் இருதயத்தில் முட்புதர்ச் செடிகள் இருப்பதாக தேவன் காட்டினாராம். மகளுடைய இருதயத்தில் முட்புதர் மரங்களாக குழிநரிகள் இருப்பதாக காட்டினாராம். இதை தேவனே விளக்கிக் கொடுத்தார்.

தாய் தன் வாலிப பிராயத்திலிருந்து தீய பாவ பழக்க வழக்கங்கள் உள்ளவளாக இருந்தாள். அவளுடைய இருதயத்தில் அந்தப் பாவங்கள் சிறுநரிகளாக (Little Fox) சிறிய அளவில் இருந்தன. இது திடீரென முளைக்கும் பாவ சுபாவமாகும். ஆனால் அதே பாவங்கள் மகளுக்குள் மரமாக இருப்பதுபோல் தலைமுறை தலைமுறையாக தொடர்ந்துவரும் பாவ சுபாவங்களாக குழிநரிகள் போல (Foxes) இருப்பதாக தேவன் விளக்கிக் கொடுத்தார்.

மணவாட்டி சபையே! கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்கும் தேவபிள்ளையே! நமக்குள்ளும் திடீரென்று தோன்றும் புதிய பாவங்கள் சிறுநரிகளாக எழும்ப வாய்ப்புள்ளது. பல தலைமுறைகளாக நமது தாத்தா, பாட்டன், பூட்டன்களுக்குள் இருந்த பாவ சுபாவங்களே குழிநரிகளாக நம்மைத் தொடர்ந்து வரப் பார்க்கும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது பாவங்களை மட்டுமல்ல நம்மைத் தொடர்ந்து வரும் சாபங்களிலிருந்தும் நம்மை விடுவித்துக் காத்துக் கொள்ளும் வல்லமையுள்ளது. (கலா 3 : 13) இந்த மூன்றாவது பருவகாலமும் மாறி மாறி வரப்பார்க்கும். வேத வசனமாகிய ஆவியின் பட்டயத்தால் எதிர்த்து நின்று ஜெயம் பெறுங்கள். பரம்பரையாக வரும் பாவசாபங்களை முறியடியுங்கள்.

## 4. கோடைக்காலம் :

நம் நேசர் தன் மணவாட்டியை நான்காவதாக கோடைகாலத்திற்கு அழைத்துச் செல்கிறார். இதுவே கடைசி பருவ காலமாகும். (Summer) இது பாலஸ்தீனாவில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் வருகிறது என்று Dakes 676 (4m) ல் சொல்கிறார். இந்தக் காலத்தில் மணவாட்டி ''கன்மலையின் வெடிப்பிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் போய்த் தங்க

வேண்டும் என்று (உன் 2 : 14) நேசர் சொல்கிறார்.

நம் நாட்டிலும் மே மாதங்களில் கோடையின் வெப்பத்தால் சேதம் அடையாமல் இருக்க கொடைக்கானல், ஊட்டி, குற்றாலம் போன்ற இடங்களுக்கு சென்று தங்கள் சரீரத்திற்கு இதமான சீதோஸ்ணத்தைப் பெற்றுக் கொண்டு அதிக வெப்பத்தால் வியாதி, பெலவீனங்கள் தங்களைத் தாக்காமல் காத்துக் கொள்கின்றனர்.

இதுபோலவே ஆவிக்குரிய பக்தி வாழ்வு செய்யும் கர்த்தருடைய பிள்ளைகளும் இந்த நான்காவது காலத்தில் ஆவிக்குரிய போராட்டத்தைச் சந்திக்க வேண்டியதுள்ளது. பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை (Sun Stroke and moon stooke) என்று (சங் 121 : 6) கர்த்தர் சொல்கிறார். இந்த உலகம் தேவ ஜனங்களுக்கு பல போராட்டங்களைக் கொடுத்து பக்தியைக் கெடுக்கப்பார்க்கும்.

"The world is not a play ground
But a Battle ground"

இந்த உலகம் நமக்கு விளையாட்டு மைதானம் அல்ல இந்த உலகம் நமக்கு போராட்ட களம் என்று A.W. TOZER சொல்கிறார். கடந்த மூன்று பருவகாலங்களிலும் தங்களைக் காத்துக் கொண்டவர்கள் இந்த நான்காவது பருவகாலத்திலும், கோடைகாலத்திலும் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட வேளைகளில் நாம் கன்மலையின் வெடிப்பில், இயேசுகிறிஸ்துவின் விலாவில் உண்டான காயத்தில், அவரின் தழும்புகளில் அடைக்கலம் புக வேண்டும். அவருடைய காயங்களும், தழும்புகளும், பிளவுண்ட கன்மலையாக நமக்கு அடைக்கப்பட்டணமாக, கோடை வாசஸ்தலமாக உள்ளது. அடைக்கலம் புகுவோம். ஆசீர்வதிக்கப்படுவோம்.

# 5

# மணவாட்டியின் தோட்டம்

மணவாட்டியாகிய சூலமித்தியாள் தன் நேசரோடு சேர்க்கப்படும் பிரயாணத்தில், உன்னதப்பாட்டில் நான்கு விதமான தோட்டங்களைச் சந்தித்தாள். நேசமணவாளனாகிய இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி சபையும் இந்த நான்கு தோட்டங்களின் ஆவிக்குரிய அனுபவத்தை சந்தித்து பின்பு நேரோடு சேர்க்கப்படுகிறாள். இந்த நான்கு தோட்டங்களும் நமது பக்தி வாழ்வில் வரும் அனுபவங்களாகும்.

## *1. சொந்த தோட்டம் :*

என் தாயின் பிள்ளைகள் என் மேல் கோபமாயிருந்து என்னைத் திராட்சத் தோட்டங்களுக்குக் காவற்காரியாக வைத்தார்கள். என் சொந்தத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை (Own Garden - negleted) இன்று இப்படிப்பட்ட ஆபத்து எல்லோருக்கும் வர வாய்ப்பிருக்கிறது. சொந்த தோட்டத்தை காவல் செய்து பண்படுத்தாவிட்டால் அதெல்லாம் முள்ளுக் காடாய் இருக்கும். நிலத்தின் முகத்தை (தேவ பிள்ளையின் முகம்) காஞ்சொறிமூடும், அதின் கற்சுவர் இடிந்து விழும். (நீதி 25: 30, 31) இந்த சொந்த தோட்டம் முதலாவது உங்களின் ஆவிக்குரிய வாழ்வு, அடுத்ததாக உங்கள் குடும்பம்.

இன்று ஊழியதாகத்தால் தங்கள் குடும்பத்தை கவனிக்காமல் போன ஊழியர்கள் உண்டு. கூட்டங்களில் தீவிரமாய்க் கலந்து கொண்டு தங்கள் குடும்பத்தை கவனிக்காமல் போன விசுவாசிகளும் உண்டு. தேவ பிள்ளையே ஜாக்கிரதையிருந்து நமது ஊழியங்கள் மத்தியிலும், கூட்டங்கள் மத்தியிலும் நமது குடும்பத்தையும் பராமரிப்போமாக!

சாமுவேல் தீர்க்கதரிசியாகவும், நியாயாதிபதியாகவும் இருந்த காலத்தில் பெத்தேல், கில்கால், மிஸ்பா, ராமா ஆகிய நான்கு பட்டணங்களிலும் நியாயாசனங்களை அமைத்திருந்தார். அவர் வருசா வருசம் புறப்பட்டு பெத்தேலையும், கில்காலையும் மிஸ்பாவையும், சுற்றிப்போய் அவ்விடங்களில் எல்லாம் நியாயம் விசாரித்தார். அவர் ராமாவுக்கு திரும்பிவருவார். அங்கே அவருடைய வீடு இருந்தது. (1சாமு 7:15, 16) நான்கு இடங்களிலும் மூன்று மூன்று மாதம் தங்கி ஊழியம் செய்திருப்பார். நியாயம் விசாரித்திருப்பார், என்று எண்ணுகிறேன்.

ஏனென்றால் அடுத்த வசனத்தில் சாமுவேல் தீர்க்கதரிசியின் பிள்ளைகள் நியாயாதிபதிகளானார்கள். ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள். அவர்களை இஸ்ரவேல் ஜனங்கள் புறக்கணித்து தள்ளினார்கள் (1சாமு 8:1 4) என்று பார்க்கிறோம். சாமுவேல் இளமையாயிருந்தபோது ஏலியின் பிள்ளைகள் எப்படிக் கெட்டுப் போயிருந்தார்கள் என்பதைப் பார்த்த மனிதன்தான். ஆனாலும் தன்னுடைய பிள்ளைகளை சத்தியத்திலும், பரிசுத்தத்திலும், நீதியிலும் நடத்த தவறிப் போனார். ஏலியின் பிள்ளைகள் ஆசாரியராயிராதபடிக்கு தள்ளப்பட்டது போல சாமுவேலின் பிள்ளைகள் நியாயாதிபதிகளாக இராதபடிக்கு ஜனங்களால் வெ!றுத்து தள்ளப்பட்டார்கள்.

எனவே நமது தோட்டத்தை நாம் அசட்டை செய்யக் கூடாது. கிறிஸ்தவ புருசனே! உன் மனைவிக்கு உன் அன்பை பகிர்ந்து கொள்ள நேரம் எடுத்துக் கொள். விசுவாசியான ஸ்திரியே! உன் புருசனுக்கு பணிவிடை செய்ய கவனமும், நேரமும் எடுத்துக்கொள். கிறிஸ்தவ பெற்றோரே! உங்கள் பிள்ளைகளுக்கு பாடம் படிப்பிக்கவும், ஜெபம் சொல்லிக் கொடுக்கவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் உங்கள் பிள்ளைகளை கவனமாய் வளர்க்கவும் நேரம் ஒதுக்குங்கள், ஊழியம் ஊழியம், கூட்டங்கள், கூட்டங்கள் என்று உள்ளூரிலும், வெளியூரிலும் ஓடித்திரிந்து நீங்கள்

ஆவியில் வளர்வது போல உங்கள் குடும்பமும் வளரட்டும் இல்லாவிட்டால் சில வருடங்களுக்கு பிற்பாடு நீங்கள் நீங்காத துயரத்தில் அழுது கொண்டே இருக்க வேண்டியது வரலாம்.

எனவே உங்கள் குடும்பத்தை கர்த்தருக்குள் வளர்க்க கவனம் எடுங்கள். சில மிஞ்சிய பரிசுத்தவான்கள் இந்த உபதேசத்தைப் பரியாசம் செய்யலாம். தன் குடும்பத்தையும் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான் (1தீமோ 5:8) என்று பவுல் எழுதுகிறார். உலகில் பெரிய சபையை நடத்தும் போதகர் பால்யாங்கி சோவும் இதையே சொல்கிறார். ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் ஊழிய வாஞ்சையினால் தன் மனைவி, பிள்ளைகளைத் கவனிக்காமல் போனாராம். கர்த்தர் அவருக்கு திட்டவட்டமாய் போதித்து கொடுத்தாராம். முதலாவது உன்னைக்கவனி. பின்பு உன் மனைவியைக் கவனி. பின்பு உன் பிள்ளைகள், அதற்கு அடுத்தபடியே உன் ஊழியம் என்றாராம். இன்று இந்த முறையில் ஊழியம் செய்யும் பால்யாங்கி - சோவின் சபையும், குடும்பமும் உலகத்திற்கு சாட்சியாகவும், சவாலாகவும் உள்ளது. எனவே நமது தோட்டமாகிய நமது குடும்பத்தை நன்றாக பராமரித்து பாதுகாப்போமாக.

## 2. அடைக்கப்பட்ட தோட்டம்:

சூலமித்தியாளின் தோட்டம் முதலாவது கவனிக்கப்படாத தோட்டமாயிருந்தது. இப்பொழுதோ அந்த தோட்டம் மிகவும் கவனமாக, பொறுப்பாக, பண்படுத்தப்பட்ட, அடைக்கப்பட்ட தோட்டமாக இருக்கிறது. மணவாளன் தன் மணவாட்டியைப் பார்த்து ''என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய் (உன் 4:12) என்று புகழ்ந்து பேசுகிறார். இந்த தோட்டம் அடைக்கப்பட்ட தோட்டமாயிருந்தபடியால் இதில் நான்குவிதமான ஆசீர்வாதம் காணப்பட்டது.

## a. காவல் செய்யப்படும் தோட்டம் :

மணவாட்டியின் தோட்டம் உள்பக்கமாய் பூட்டப்பட்ட தோட்டம் என்று நேசர் சொல்கிறார். (you are inclosed door is my Sister). நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு நேசர் இயேசுவே கதவாகவும் தாழ்ப்பாழ்களாகவும் இருக்கிறார். இந்த தாழ்ப்பாழை உள் பக்கமாய் தேவன் பூட்டியுள்ளார். தோட்டத்தின் உள்ளே நேசரும், மணவாட்டியும் மட்டுமே உண்டு. சாத்தானாகிய எதிரியானவன் வெளியே இருக்கிறான். எனவே தேவனுடைய அனுமதியில்லாமல், சத்துரு உன் தோட்டத்தில் நுழைய முடியாது. தேவன் பொல்லாங்கினால் ஒருவரையும் சோதிக்கிறவறல்ல. எனவே உள்பக்கமாய் பூட்டிய கதவை தேவன் ஒருபோதும் திறக்கமாட்டார்.

ஒருவேளை நீ அந்தக் கதவை திறந்துவிட உனக்கு சுயாதீனம் உண்டு. எனவேதான் உன்னைச் சுத்தவானாகக் காத்துக் கொள் என்று பரிசுத்த ஆவியானவர் எச்சரிக்கிறார். அனுதினமும் நீயும் உன் வீட்டாரும் சேர்ந்து தேவனைத் துதி எருசலேமே கர்த்தரை ஸ்தோத்தரி. சீயோனே, உன் தேவனைத் துதி, அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி உன்னிடத்தில் உள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார். உன் எல்லைகளை சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குவார். (சங் 147 : 12 - 14).

## b. கனிகள் உள்ள தோட்டம் :

ஆத்தும நேசர் இயேசுகிறிஸ்து தமது மணவாட்டியின் தோட்டத்தில் வந்து உலாவும் போது அங்கு ஏராளமான கனிகளைக் கண்டார். கனிகளைப் பறித்தும் புசித்தார். (உன் 5 : 1) அந்தக் கனிகளை வரிசைப்படுத்தி சொல்கிறார். அங்கு ஒன்பது விதமான கனிவிருட்சங்கள் உள்ளதாகச் சொன்னார். இந்த ஒன்பது கனிகளும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட ஆவியின் ஒன்பது கனிகளுக்கு ஒப்பாயிருக்கிறது. (உன் 4 : 12 - 14; கலா 5 : 21, 22).

1. மாதளஞ்செடி - அன்பு
2. மருதோன்றிச் செடி - சந்தோசம்
3. நளதச்செடி - சமாதானம்
4. குங்குமம் - நீடிய பொறுமை
5. வசம்பு - தயவு
6. லவங்கம் - நற்குணம்
7. வெள்ளைப்போளம் - விசுவாசம்
8. சந்தனவிருட்சங்கள் - சாந்தம்
9. கந்த வர்க்கச் செடி - இச்சையடக்கம்.

ஆகிய ஒன்பது கனிகளைக் கண்டார். தேவனுக்கு மகிமையுண்டாவதாக. தேவபிள்ளையை! ஆவியின் வரங்களை நீ நாடித் தேடுவது நல்லது. அதைவிட ஆவியின் கனிகளைத் தேடு. ஆவியின் வரங்கள் உன்னிடம் இருந்தால் அதன் மூலம் நீ மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பாய். ஆனால் ஆவியின் கனி உன்னிடம் விளங்குமானால்தான் நீ கர்த்தருடைய வருகையில் சேர்க்கப்பட முடியும். ஆவியின் கனியே உனக்கு ஆசீர்வாதமாக அமையும்.ஆவியின் கனியை நீ பயிற்சிசெய்.

வாட்ச்மேன் நீ என்ற தேவ ஊழியர் சீனாவில் ஊழியம் செய்தார். ஒருநாள் ஒரு விசவாசியின் வீட்டுக்கு ஜெபிக்கச் சென்றாராம். அந்த வீட்டின் தாயார் இந்த ஊழியரிடத்தில் ''தேவன் எனக்கு அதிகமான பொறுமை என்னும் ஆவியின் கனியை உருவாக்க'' ஜெபியுங்கள் என்றாராம். இந்த ஊழியக்காரர் ''தேவனே இந்த அம்மாவுக்கு அதிகமான உபத்திரவத்தை அனுப்பும்'' என்று ஜெபித்தாராம்.

இந்த தாயார் தேவமனுஷனுடைய ஜெபத்தை தடுத்து நிறுத்தினார்கள். ஐயா! எனக்கு பொறுமை வேண்டும் என்று ஜெபிக்கச் சொன்னேன். நீங்களோ உபத்திரவத்தை எனக்கு தேவன் தரவேண்டும் என்று ஜெபிக்கிறீர்களே! என்று கேட்டபோது,

தேவமனிதன் சொன்ன பதில் இதோ!

உபத்திரவம் பொறுமையை உண்டாக்கும்.ரோமர் 5:3 என்று தேவ வசனம் சொல்கிற படியால் உபத்திரவம் வந்தால் தான் பொறுமை என்னும் ஆவியின் கனி உள்ளதா என்று உங்களுக்கு தெரியும். எனவே ஆவியின் கனியை அப்பியாசப்படுத்த பல சூழ்நிலைகள் வழியாய் தேவன் நடத்தும் போது நம்முடைய உள்ளான உண்மை சுபாவத்தை நாம் கண்டுபிடித்து குறைவுகள் நீங்க ஜெபித்து ஆவியின் கனியை பெற்று அப்பியாசப்படுத்துவோமாக!

### 3. *நீர்ப்பாய்ச்சலான தோட்டம் :*

மணவாட்டியாகிய சூலமித்தியின் தோட்டத்திற்கு நீரூற்றும், ஜீவதண்ணீரின் துரவும் லீபனோனிலிருந்து ஓடிவரும் வாய்க்கால்களும் உண்டாயிருக்கிறது (உன் 4:15) என்று நேசர் அவளைப் புகழ்ந்தார். இந்த நீர்ப்பாய்ச்சலான அனுபவமும் மூன்று நிலைகளில் இருப்பதைக் காண்கிறோம்.

a. நீரூற்று - இதை தேவனே திறந்து விடுகிறார். நீரூற்றை நாம் உண்டாக்க முடியாது. தேவனே தமக்குச் சித்தமான இடத்தில், தமக்குச் சித்தமான வேளையில் நீரூற்றை திறந்து விடுகிறார். கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட நீரூற்றுகள் அதிகம் இருப்பதைக் காணமுடியும் ஆகவே அந்த மாவட்டம் ஏதேன் தோட்டம் போல செழித்திருப்பதைப் பார்க்கிறோம். எனவே தேவனே நம்மை ஆசீர்வதிக்கவும், ஆவிக்குரிய வாழ்வில் நாம் செழிப்புள்ளவர்களாயிருக்கவும் செய்கிறவர் என்று நம்மைத் தாழ்த்தி ஜீவித்தால் நம் ஊற்றுக் கண்களை ஆசீர்வதிப்பார்.

### b. *ஜீவதண்ணீரின் துரவு :*

ஆபிரகாம் துரவு (கிணறு) தோண்டினான். அவைகளைப் பெலிஸ்தர்கள் தூர்த்துப் போட்டார்கள். மறுபடியும் ஈசாக்கு அவைகளைத் தோண்டினான். தண்ணீர் கண்டான். கேரார்

மேய்ப்பர்கள் அவைகள் தங்களுடயது என்று வாக்குவாதம் செய்தார்கள். ஈசாக்கு அவைகளை விட்டு விட்டு தூரமாய் சென்று துரவு தோண்டினான். அங்கே சுரக்கும் துரவுகளைகளைக் கண்டார்கள். அதற்கு தேவன் நமக்கு பலுகிப் பெருக இடமுண்டாக்கினார் என்று "ரெகபோத்" என்று பெயரிட்டான். இவ்விதமாக நமது ஆவிக்குரிய வாழ்க்கையை செழிப்பாக்க நமது பிரயாசம் நமது முயற்சி, கடின உழைப்பு, கண்விழிப்பு, ஆகியவைகள் மூலம் பிரயாசப்பட்டால் நமது ஆத்துமாவில் ஜீவதண்ணீரின் துரவுகள் பாய்ந்தோடும். சோம்பேறி விரும்பியும் ஒன்றும் பெற்றுக் கொள்ள மாட்டான்.

**C. *வாய்க் கால்கள் :***

குறிப்பிட்ட இடங்களில் தண்ணீர் தேங்கி இருக்கும் இடங்களை அணைக்கட்டு என்கிறோம். அங்கிருந்து பற்பல இடங்களுக்கு வாய்க்கால்கள் மூலம் தண்ணீர் கொண்டு சென்று நீர்ப்பாய்ச்சுவதுபோல நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்காக அணைக்கட்டுகள் போல் தேவ ஆசீர்வாதங்கள் தேங்கிய பரிசுத்தவான்கள் சிலரை பல இடங்களில் தேவன் வைத்துள்ளார். அப்படிப்பட்ட ஊழியக்காரர்களை நமது இடங்களுக்கு கூப்பிட்டு கூட்டம் வைத்தால் அணைக்கட்டின் நீரானது வாய்க்கால் வழியாக தோட்டத்திற்கு பாய்வது போல் இந்த பரிசுத்தவான்கள் மூலம் நமது சபைகளுக்கு நீர் பாய்ச்சப்படும். பவுல் நட்டார். அப்பல்லோ நீர் பாய்ச்சினான். தேவனே விளையச் செய்தார். (1 கொரி 3 : 6) என்ற வசனம் நமது ஊழியத்திலும் நிறைவேறும். கர்த்தருடைய கிருபையினால் எங்களுடைய சபைக்கு இந்த 1995 ஆம் ஆண்டு முழுவதும் நம் தேசத்தில் முண்ணனியில் உள்ள பெரிய பெரிய அணைக்கட்டுகளின் தண்ணீர் எங்கள் சபையின் பக்கமாய் திருப்பப்பட்டது.

சில சபைகளில் பிற ஊழியர்கள் இயற்றிய பாடல்களைப் பாட மாட்டார்கள். பிற ஸ்தாபனத்தில் உள்ள ஊழியர்களை ஊழியத்தில் பயன்படுத்த மாட்டார்கள். கிணற்றுத் தவளைபோல் விசவாசிகளை

அடக்கிவைத்திருப்பார்கள். அப்படிச் செய்தால் சபையானது சீரான ஆவிக்குரிய வளர்ச்சியை அடைய முடியாது. ''சகல பரிசுத்தவான்களோடுங் கூடக் கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து...... தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்படுங்கள் (எபே 3:18, 19) என்று பவுல் சபைக்கு எழுதுகிறார். இதுவே வாய்க்கால்களின் அனுபவமாகும்.

## 4. ஆயத்தமான தோட்டம் :

திராட்சத் தோட்டத்துக்கு காவலாளியாக உள்ள சூலமித்தியாள் இயற்கையைப் பார்த்து கட்டளையிடுகிறாள். ''வாடையே எழும்பு, தென்றலே வா'', என்று கட்டளையிட்டாள். ஆங்கில வசனம் நமக்கு சற்று கூடுதலாக விளக்கத்தை இந்த இடத்தில் தருகிறது.

Awake O north wind;

come, O south wind;

வடதிசைக் காற்றே வெளியே போ தென்திசைக்காற்றே உள்ளே வீசு. உன் 4 : 16

என்று கட்டளையிடுகிறாள். வடதிசைக் காற்றே நீ என் தோட்டத்தை விட்டு வெளியே போ; என்றும் தென்திசைக் காற்றே நீ என் தோட்டத்திற்குள் வந்து வீசு; என்று மணவாட்டி ஏன் கட்டளையிடுகிறாள்.

''வடதிசைக் காற்றினால் குளிர்வரும்'' யோபு 37 : 9

தென்திசைக் காற்றில் (தென்றலினால்) உஸ்ணம் உண்டாகும். லூக் 12: 55.

என்று நாம் வேதத்தில் காண்கிறோம். எனவேதான் தேவனுடைய சபையில் குளிர்ந்த அனுபவங்கள் வெளியேற வேண்டும். அக்கினியின் அனுபவங்கள் சபைக்குள் வீச வேண்டும் என்று மணவாட்டி கட்டளையிடுகிறாள். இன்று உலகெங்கிலும் கடந்த நூற்றாண்டுகளில் சபைகளை மூடியிருந்த குளிர்ந்த ஜீவியம் மாறி அனலான அனுபவங்கள் எல்லா தேசங்களிலும் சபைகளை நிரப்பி

வருகிறதைக் காண்கிறோம். “ என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக என்று மணவாட்டி தன் ஆத்ம நேசரை அழைக்கும் காலம் நெருங்கிவிட்டது, உன் 6:16 என்று உணர்கிறோம். எனவே மணவாட்டின் தோட்டம் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமான தோட்டமாயிருக்கிறது.

## 3. வளர்ச்சியுள்ள தோட்டம் :

சூலமித்தியாளாகிய மணவாட்டி மூன்றாவதாக வாதுமைத் தோட்டத்துக்கு போனாள் (உன் 6:11). இந்த வாதுமைத் தோட்டத்தில் மூன்று ஆவிக்குரிய அனுபவங்களை இவள் பெறுகிறாள். பள்ளத்தாக்கிலே பழுத்த கனிகளைப் பார்க்கவும் திராட்ச செடிகள் துளிர்விட்டு, மாதளஞ் செடிகள் பூப்பூத்ததா என்று அறியவும் வாதுமைத் தோட்டத்துக்குப் போனேன் என்று கூறினாள்.

### a. வாக்குத்தத்தமுள்ள தோட்டம் :

வாதுமைத் தோட்டம் பள்ளத்தாக்கில் உள்ளதாகப் பார்க்கிறோம். இந்த பள்ளத்தாக்கின் தோட்டத்தில் கனி பழுத்துள்ளதா? என்று மணவாட்டி தேடுகிறாள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்கிறார்கள். மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின் மேல் பலம் அடைந்து சீயோனில் தேவ சந்நிதியிலே வந்து காணப்படுவார்கள் (சங் 84:6,7) என்பதே கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள வாக்குத்தத்தம். எனவே எழுப்புதலின் உச்சியில் கெம்பிரிக்கிற நம்மை உடனே பள்ளத்தாக்கின் அனுபவத்திற்குள் கர்த்தர் நடத்தி நமக்கு தாழ்மையை கற்றுத் தருகிறார் என்று பலமுறை நமது வாழ்வில் கண்டிருக்கிறோம். பள்ளத்தாக்கில் பல உபத்திரவங்களையும், விசுவாச பரீட்சைகளையும் சந்திக்கும் போது சோர்ந்து போக வேண்டாம். பள்ளத்தாக்கிலே செல்லும்

போதெல்லாம் நமக்கு நல்ல வாக்குத் தத்தங்களைக் கொடுத்து கர்த்தர் நம்மை தேற்றி நடத்துவார். இந்த வாக்குத் தத்தங்கள் நமது ஆவிக்குரிய வாழ்க்கையாகிய தோட்டத்தை வளர்ச்சியடையச் செய்யும்.

## b. சுத்திகரிக்கப்பட்ட தோட்டம் :

சூலமித்தியாள் வாதுமைத் தோட்டத்துக்கு வந்ததும் இரண்டாவதாக திராட்சை செடிகள் துளிர் விட்டதா? என்று பார்க்கப் போனேன் என்கிறாள். திராட்சச் செடியானது கத்தரித்து விட்ட பின்பே அது துளிர்விடத் தொடங்கும். திராட்சச் செடிகள் அறுப்புக்கு முன்னே பூப்பூத்து முற்றிக் காய்க்கிற காய்கள் பிஞ்சாயிருக்கும் போதே அவர் அரிவாள்களினாலே கப்புக்கவர்களை அறுத்துக் கொடிகளை அரிந்து அகற்றிப் போடுவார் ( ஏசா 18:5) என்று வேதம் சொல்கிறது. நமது ஆண்டவரும் இதையே உறுதிப்படுத்தி ''கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார் (யோவான் 15:2) என்று சொல்கிறார். எனவே மணவாட்டியின் தோட்டம் அடிக்கடி சுத்திரிக்கப்படுகிற தோட்டமாயிருக்கிறது. அடிக்கடி சுத்திகரிக்கும் போது கனிகளை கொடுக்கிற தோட்டமாய் மாறுகிறது.

கனிகொடுப்பான் 30% யோவான் 152.

அதிக கனிகொடுப்பான் 60% யோவான் 15:2.

மிகுதியான கனிகொடுப்பான் 100% யோவான் 15:5.

என்பதே நேசரின் திராட்சைத் தோட்டத்தின் வளர்ச்சியாகும். எந்த மனிதன் தன்னைக் கர்த்தர் சுத்திரிக்க இடங்கொடுக்கிறானோ அவன் படிப்படியாய் வளர்ந்து கனி கொடுப்பதில் விருத்தியடைவான்.

### c. அன்பின் தோட்டம் :

மணவாட்டியின் தோட்டம் வளர்ச்சியுள்ள தோட்டமாயிருக்கிறதற்கு காரணம் அது அன்புள்ள தோட்டம், கிருபைகள் நிறைந்த தோட்டம் என்று காண்கிறோம். ''மாதளஞ்செடிகள் பூத்ததா?'' உன் 6 : 11 என்று மணவாட்டி தேடிப் போய் ஆவலாய் பார்த்தாள். மாதளை என்பது தேவ அன்புக்கும், தேவகிருபைக்கும் ஒப்பிடலாம். தேவ அன்பையும், தேவ கிருபையையும் இழந்து போக வாய்புள்ளது. எபேசுசபை தேவ அன்பை இழந்துவிட்டது. சவுல் ராஜா தேவ கிருபையை இழந்து போனார் என்று வேதத்தில் காண்கிறோம். எனவேதான் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்வில் தேவ கிருபைகளும், தேவ அன்பும் தொடர்ந்து கிரியை செய்கிறதா? என்று மணவாட்டி தேடிப்பார்க்கிறாள். மாதளஞ்செடிகள் பூத்ததா? என்பதற்கு இதுவே விளக்கம்.

தேவபிள்ளையே அன்பில்லாத ஊழியமும், கிருபையில்லாத வாழ்வும் சகாரா பாலைவனமாய் இருக்கும். எனவே தேவ அன்பில் நிறைந்து ஊழியம் செய்யுங்கள். கிருபையை நாள்தோறும் பெருக்கிக் கொள்ளுங்கள்.

## 4. அறுவடையின் தோட்டம் :

சாலமோன் ராஜாவுக்கு பாலஸ்தீன தேசத்தில் பல இடங்களில், பல திராட்சத் தோட்டங்கள் இருந்தது. இதிலே சூலமித்தியாள் காவல் செய்த தோட்டம் பகால் ஆமோனிலே உள்ள திராட்ச தோட்டமாகும். மற்ற தோட்டங்களைவிட மணவாட்டியின் தோட்டம் பல விஷேசங்கள் உள்ள தோட்டமாயிருந்தது (உன் 8 : 11)

பகால் - என்பதற்கு அழகான (Beatiful)

அமோன் - என்பதற்கு திரளான அறுவடை (great Harvest)

என்று அர்த்தமாகும். மணவாட்டியின் தோட்டம் அழகான

தோட்டமாகவும், திரளான அறுவடையுள்ள தோட்டமாகவும் இருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் கற்றுக் கொடுக்கிறார். நமது சபைகளும், ஊழியங்களும் தரத்திலும் (Quality) உயர்ந்திருக்க வேண்டும். எண்ணிக்கையிலும் (Quantity) பெருகவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாகும்.

பிசாசின் கொடிய வஞ்சகம் என்னவெனில் ஆவிக்குரிய தரமுள்ள விசுவாசிகள் நமது சபைகளில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எண்ணிக்கையில் நமது சபைகள் பெருகுவதை தேவ ஊழியர்கள் விசுவாசிக்க முடியாமல் செய்துவிடுகிறான். முத்துக்களான விசவாசிகள் பத்துப்பேர் போதும் என்று சிலர் சொல்வார்கள். அந்த பத்து முத்துக்களையும் உடைத்துப் பார்த்தால் அவர்கள் புளியமுத்தாக இருக்கிறார்களே ஒழிய விலையுயர்ந்த முத்தாக அவர்கள் இல்லை.

எண்ணிக்கை பெருகும்போது ஆவிக்குரிய உபதேசத்தையும், உண்மை பரிசுத்தத்தையும் சபைகளில் காணமுடியாது என்பது சில ஊழியர்களின் அபிப்பிராயமாயிருக்கிறது. அப்படியல்ல. மணவாட்டியின் தோட்டம் அழகான தோட்டம், அறுவடை பெருகிய தோட்டம், வேதவசனம் சொல்லும் உயர்ந்த தேவனுடைய எண்ணங்களை நமது எண்ணங்களாக விசாலமாக்கும் போது அவன் இருதயத்தின் எண்ணம் எப்படியேயா அப்படியே அவனும் இருக்கிறான் என்று (நீதி 23 : 7) கர்த்தர் வசனம் சொல்கிறபடியே நமக்கும் நடக்கும்.

## b. எதிர்பார்ப்பின் தோட்டம் :

சாலமோனின் திராட்சத் தோட்டத்தைக் காவல் செய்கிறவர்களுக்கு ஒரு கட்டளையை ராஜா பிறப்பித்து உள்ளார். ஒவ்வொரு காவலாளியும் தன் எஜமானுக்கு ஒவ்வொரு அறுவடையிலும் ஆயிரம் வெள்ளிக் காசு கொண்டுவரும்படி கட்டளையிட்டுள்ளார். உன் 8 : 11, இதற்கு விளக்கம் என்ன? பல

ஆயிரம் ரூபாய் அல்லது சில லட்ச ரூபாய் செலவழித்து கூட்டங்கள் வைக்கிறோம். ஊழியங்களை நடத்துகிறோம். இக்கூட்டங்களின் முடிவில் ஆயிரம் ஆத்துமாக்களாவது இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய களஞ்சியமாகிய சபைக்கு கிடைக்க வேண்டும் என்பதுதான் தேவனின் எதிர்பார்ப்பு.

ஒவ்வொரு கூட்டத்திலும் ஆயிரம் வெள்ளிக்காசு ஆயிரம் ஆத்துமாக்கள் அறுவடை செய்யாவிட்டாலும் நமது ஆயுட்காலத்திலாவது நம்மூலம் ஆயிரம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். தேவ கிருபையினால் எனக்கு கிடைத்துள்ள தரிசனத்திற்காகவும், வாக்குத்தத்திற்காகவும் தேவனைத் துதிக்கிறேன்.

சின்னவள் ஆயிரமும்
சிறியவன் பலத்த ஜாதியுமாவான் - ஏசா 60 : 22.

என்பதே என்னுடைய ஊழியத்தின் இலக்காக தேவன் தந்துள்ளார். சூலமித்தியாள் ஊழியம் செய்த பகால் ஆமோனின் திராட்சதோட்டமாக எங்களுடைய சபையை தேவன் தெரிந்து கொண்டுள்ளார் என்று இந்த வசனத்தை தியானிக்கும் போது களி கூர்ந்து இதை எழுதுகிறேன். எல்லாம் தேவ கிருபையே. கர்த்தர் வருகைவரை இந்தக் கிருபை பெருகுவதாக என்று ஜெபத்துடன் இதை எழுதுகிறேன்.

இதைப்படிக்கும் தேவ ஊழியரே! தேவ ஜனமே உங்களைக் குறித்தும் தேவன் இதே திட்டத்தையே வைத்துள்ளார். தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல. ஆ! தேவனுடைய வருகையிலே நமது சபைகளும், ஊழியங்களும் பாகால் - ஆமோன் திராட்சத்தோட்டமாயிருப்பதாக!

வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர். அவைகளை நிறைவேற்ற வல்லமையுள்ளவர். ஆயிரம் ஆத்துமாக்கள் நமது சபைகளில் இந்த வருடத்திற்குள் கிடைப்பார்களாக.

## c. பலன் பெறும் தோட்டம் :

பகால் ஆமோனின் திராட்சத் தோட்டத்தில் காவலாளியாக இருந்தவர்களுக்கு சாலமோன் ராஜா 200 வெள்ளிக்காசை சம்பளமாகக் கொடுத்தார் உன் 8:12. என் திராட்சத் தோட்டம் எனக்கு முன்பாக இருக்கிறது. சாலமோனே! உமக்கு அந்த ஆயிரமும் அதன் கனியைக் காக்கிறவர்களுக்கு இருநூறும் சேரும் என்று சூலமித்தியாள் சொல்கிறாள்.

இருநூறு என்பதற்கு உண்மையுள்ள ஊழியக்காரன் என்று (Faithful servant) அர்த்தமாகும் என்று பல வேதபண்டிதர்கள் எழுதுகிறார்கள். நம் ஆண்டவர் புதிய ஏற்பாட்டிலும் நல்லது, உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாய் வைப்பேன்'' என்று (மத் 25:20) சொல்லும்படி நாம் ஊழியம் செய்ய வேண்டும் என்று சொல்கிறார். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர். பவுல் அப்போஸ்தலன் உண்மையுள்ளவன் என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. எபி 3:2; 1தீமோ 1;12, அந்திக் கிறிஸ்துவின் அட்டுழியங்களை மேற் கொண்டு ஜெயம் பெறும் பரிசுத்தவான்களும் உண்மையுள்ளவர்களே என்று (வெளி 17:14) கர்த்தர் சொல்கிறார்.

எனவே நமது ஆண்டவர் வருகையில் காணப்பட உண்மையுள்ள விசுவாசியாய், உத்தமமான ஊழியர்களாய் காணப்பட்டால் இந்த உலகில் நாம் பட்ட பிரயாசங்களுக்கும், நடப்பித்த ஊழியங்களுக்கும் பலன் கொடுக்க ஆண்டவரும் உண்மையுள்ளவராயிருக்கிறார். வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே - ஆமென்.

# 6

# மணவாட்டியின் மலைகள்

நம் இரட்சகரும் ஆத்தும மணவாளனுமாகிய இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தை தொடங்கும்போது மலையில் தொடங்கினார். அவர் திரளான ஜனங்களைக் கண்டபோது மலையின் மேல் ஏறினார். அவர் உட்கார்ந்த போது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். மத் 5 : 1

பின்பு இயேசுகிறிஸ்து ஒரு மலையின் மேல் ஏறி தமக்குச் சித்தமானவர்களை தம்மிடத்தில் வரவழைத்தார். அவர்கள் அவரிடத்தில் வந்தார்கள். மாற்கு 3 : 13.

மணவாளனாகிய இயேசு மலையின்மேல் ஏறினார் அவருடைய மணவாட்டியையும் மலைக்கே அழைத்துப்போனார். மலை என்பது தரை மட்டத்தைவிட உயரமான இடமாயிருப்பது போல் கிறிஸ்தவ ஜீவியமானது மற்ற சன்மார்க்க, பக்திமார்க்கங்களைவிட உன்னதமான, மேன்மையான ஜீவியமாகும். இதற்காகவே இயேசுகிறிஸ்து மலையின் மேல் ஏறி தமது சீஷர்களையும், மணவாட்டி சபையையும் மலைக்கு அழைத்துப் போகிறார்.

உன்னதப்பாட்டில் மணவாட்டியாகிய சூலமித்தியாள் நான்குவிதமான மலைகளில் அழைத்துச் செல்லப்பட்டாள். இந்த நான்கு மலைகளிலும் மகா உன்னதமான ஆவிக்குரிய அனுபவத்தைப் பெற்றுக் கொண்டாள். அதை இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

## *1. பரிசுத்த மலை - பெத்தேர் :*

மணவாட்டியாகிய சூலமித்தியாள் முதலாவது சந்தித்த மலை பெத்தேர் மலையாகும். என் நேசரே! பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்து போகும் வரைக்கும், நீர் திரும்பி, குன்றும் பிளப்புமான கன்மலைகளில் குதித்து வரும் கலைமானுக்கும் (The mountain of

Bether) மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும் என்று சொன்னாள். இந்த மலையில் நேசரைச் சந்தித்து என் நேசர் என்னுடையவர். நான் அவருடையவள் என்றாள். (உன் 2;16,17). அவர் லீலிபுஸ்பங்களுக்குள்ளே மேய்கிறார் என்றாள்.

பெத்தேர் மலை - என்பதற்கு பிரித்து எடுக்கப்படுதல் என்று பொருள்படும். பரிசுத்தம் என்ற வார்த்தை பிரித்து எடுக்கப்படுதல் என்ற வார்த்தையிலிருந்தே வந்தது. கிரேக்க மொழியில் பரிசுத்தம் என்ற சொல்லுக்கு "Hagiazo" - To Separte for a sacred use என்று சொல்லப்பட்டுள்ளது. Dakes Page NT 115 (4F)

எனவே மணவாட்டி தன் மணவாளனோடு ஐக்கியப்படும் முதல் இடம் பரிசுத்த மலையாகிய பெத்தேர் மலையாகும். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே. தேவனுக்காக பிரித்து எடுக்கப்படுதல் அல்லது வேறுபாட்டின் ஜீவியம் என்றாலே இக்கால கிறிஸ்தவர்களை நடுங்க வைக்கும் உபதேசமாக இருக்கிறது. தேவ ஜனமே பிரித்து எடுக்கப்படுதல் இல்லாவிட்டால் பரிசுத்தம் இல்லை.

தேவாலயம் பரிசுத்தமுள்ளது. அதற்கு காரணம் தேவாலயம் தேவனுக்காக கட்டப்பட்டு, தேவனுக்காக பிரித்து எடுக்கப்பட்டு பிரதிஸ்டை பண்ணப்பட்ட படியால் தேவாலயம் பரிசுத்தமுள்ளது.

ஓய்வுநாளை தேவன் பரிசுத்தப் படுத்தி ஆசீர்வதித்தார். அதற்குக் காரணம் ஓய்வுநாள் தேவனுக்காக என்று பிரித்து வைக்கப்பட்ட நாளாயிருக்கிறபடியால் ஓய்வுநாள் பரிசுத்த-முள்ளது.

ஆசாரியன் பரிசுத்தமுள்ளவன் என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. அதற்கு காரணம் ஆசாரியன் மனிதர்கள் மத்தியிலிருந்து தேவ ஊழியத்துக்காய் பிரித்தெடுக்கப்பட்டு பிரதிஸ்டை பண்ணப்பட்டவனானதால் ஆசாரியன் பரிசுத்தவனா-யிருக்கிறான்.

தசமபாகம் பரிசுத்தமுள்ளது என்று வேதம் சொல்கிறது. காரணம் என்னவெனில் முழுமையான சம்பளத்தில் பத்தில் ஒரு பாகம் தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டு தேவ கரத்தில்

கொடுக்கப்படுகிறபடியால் தசமபாகம் பரிசுத்தமுள்ளது என்று கர்த்தர் சொல்கிறார்.

எனவே பிரித்தெடுக்கப்படுதலும், பிரதிஸ்டையுமே நமக்கு பரிசுத்தத்தைத் தருகிறது. தேவ ஜனமே நீ பிரித்தெடுக்கப்பட்ட பிரதிஷ்டையுள்ள ஜனமா? இல்லாவிட்டால் கூட்டத்தோடு கூட்டமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாயா?

## எதுவரை பரிசுத்தம் :

நாம் இரட்சிக்கப்பட்ட நாளில் உலகம், மாம்சம், பிசாசின் கரத்திலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்டோம். அன்றுதானே பெத்தேர் மலையின் அனுபவம் நமக்கு வருகிறது. என் நேசர் என்னுடையவர். நான் அவருடையள் என்று ஒப்புக் கொடுக்கிறோம். (உன் 2:16) அப்பொழுது நம் நேசர் லீலிபுஸ்பங்களுக்குள்ளே மேய்கிறார் என்ற வசனம் நம்மில் நிறைவேறுகிறது. லீலி என்றால் வெண்மை - பரிசுத்தம் (Purity) என்று அர்த்தம். இந்த பரிசுத்த ஜீவியம் 40 நாட்களுக்கு அல்ல, அல்லது சில மாதங்களுக்கு அல்ல நமது ஆயுள்கால முழுவதும் (அல்லது) நம் நேசருடைய வருகைபரியந்தம் பரிசுத்த வாழ்வு வாழவேண்டும்.

என் நேசரே பகல் குளிர்ச்சியாகி, நிழல் சாய்ந்து போகும் வரைக்கும் நீர் திரும்பி குன்றும் பிளப்புமான பெத்தேர் கண்மலைகளில் குதித்துவரும் கலைமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும் என்று மணவாட்டி (உன் 2:17) சொன்னாள். எனவே பரிசுத்த வாழ்வு நமது ஆயுட்கால முழுவதும் நமக்கு சாத்தியமே. உங்களில் நற்கிரியையை (பரிசுத்தம்) தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார் (பிலி 1:5) என்று பவுல் அப்போஸ்தலன் பிலிப்பிய சபையாரை வாழ்த்துகிறார். வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லவர் என்று (யூதா.24) நம்மை தைரியப்படுத்துகிறார்.

## 2. சுகமாக்கும் மலை - கீலேயாத் :

ஆத்தும நேசர் இயேசு கிறிஸ்து தமது மணவாட்டியைப் புகழும்போது முதலாவது தன் புகழ்ச்சியை தலையில் தொடங்குகிறார். உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறாக்கண்களாயிருக்கிறது. உன் கூந்தல் கீலேயாத் மலையில் தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது (உன் 4 : 1) என்று புகழ்ந்தார். மணவாட்டியின் இரண்டாவது ஆசீர்வாதம் கீலேயாத் மலையாகும்.

கீலேயாத் என்பதற்கு தெய்வீக சுகம் என்று பொருளாகும். கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னே ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்? (எரே 8 : 22) என்று எரேமியா புலம்புகிறார்.

★ இயேசுகிறிஸ்து நமது பாவத்தைச் சுமந்தார் ஏசா 53 : 12.

★ இயேசுகிறிஸ்து நமது அக்கிரமத்தைச் சுமந்தார் ஏசா 53 : 11.

★ இயேசுகிறிஸ்து நமது துக்கங்களைச் சுமந்தார் ஏசா 53 : 4.

★ இயேசுகிறிஸ்து நமது நோய்களைச் சுமந்தார் மத் 8 : 17.

எனவே, அவருடைய தழும்புகளால் குணமாகிறேன். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1பேதுரு 2 : 24) என்று நம் ஆண்டவர் சொல்கிறார். ஆத்தும நேசர் நமது சரீரத்தையும், ஆத்துமாவையும் குணமாக்குகிற கீலேயாத்தின் பிசின்தைலமா-யிருக்கிறார். உங்களுடைய வியாதி எப்பேர்ப்பட்டதாயிருந்தாலும் கர்த்தரை அண்டிக் கொள்ளுங்கள். கர்த்தர் குணமாக்குவார். எங்களுடைய ஊழியத்தில் இரட்சிக்கப்பட்ட பெரும்பாலோர் தங்களுடைய சரீரத்தில் பெற்ற அற்புத சுகத்தினால்தான் இரட்சிக்கப்பட்டனர். நீங்களும் கர்த்தரை விசுவாசியுங்கள். இந்த நேரம் உங்களுக்கு ஒரு அற்புதம் செய்வார்.

## ஒப்புரவாக்கும் மலை - கீலேயாத் ;

முற்பிதாவாகிய யாக்கோபும் அவருடைய மாமனார் லாபானும் சந்தித்த இடம் கீலேயாத் ஆகும். (ஆதி 31:48). யாக்கோபும், ஏசாவும் ஒப்புரவான இடம் கீலேயாத் ஆகும். தீங்கு செய்ய வந்த லாபானும், மாமனாரை வஞ்சித்து, ஏமாற்றிய மருமகனும் சந்தித்து ஒப்புரவான இடம் இந்த கீலேயாத் மலைதான். இருபது ஆண்டுகளாக தன் சகோதரனைக் கொலை செய்ய வேண்டும் என்று வைராக்கியமாயிருந்த ஏசாவின் கோபம் மாறி, சாந்தமாகி, சகோதரனை முத்தமிட்ட இடம் இந்த கீலேயாத்தான்.

தேவனுடைய பிள்ளைகளுக்குள், கசப்பு, வைராக்கியம், கோபம், மூர்க்கம், எரிச்சல், பகை ஆகியவைகளை வைத்துக் கொள்ளக் கூடாது. ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து, தாழ்மையோடு ஒப்புரவாக வேண்டும்.

ஒப்புரவாகுதல் இல்லாதபட்சத்தில் தெய்வீக சுகம் கிட்டாது. எவ்வளவு ஜெபித்தாலும், உபவாசித்தாலும், முழு இரவு விழித்திருந்தாலும் ஒப்புரவாகுதல் இல்லாத பட்சத்தில் கர்த்தர் உங்களைக் குணமாக்கமாட்டார். நீங்கள் சொஸ்தமாகும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிக்கிறது. (யாக் 5:16).

## *மகிமையின் மலை - கீலேயாத் :*

மணவாட்டியின் கூந்தலானது கீலேயாத் மலையில் தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது (உன் 4:1) என்று மணவாளன் புகழ்ந்தார். கீலேயாத் மலையில் பச்சையான இலைகள் தழைகள், புல்வெளிகள் அதிகம் உண்டு. ரூபன் புத்திரருக்கும். காத் புத்திரருக்கும் ஆடுமாடுகள் திரளாயிருந்தது. அவர்கள் கீலேயாத் தேசத்தைப் பார்த்த போது

அது ஆடு மாடுகளுக்கு தகுந்த இடமென்று கண்டார்கள் (எண் 32:1) உம்முடைய ஜனத்தை உமது கோலினால் மேய்த்தருளும். பூர்வநாட்களில் மேய்ந்தது போலவே அவர்கள் பாசானிலும், கீலேயாத்திலும் மேய்வார்களாக (மீகா 7:14) என்று வேதம் சொல்கிறது.

எனவே செழிப்பான இலை, தழை, புல் சாப்பிட்டு இந்த வெள்ளாடுகளுக்கு அதிக அடர்த்தியான முடி இருக்கும். இதைப் போலவே மணவாட்டியின் கூந்தலும், அடர்த்தியாகவும், அழகாகவும் உள்ளதாக சொல்கிறார். ஸ்திரியானவள் தன் முடியை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறது என்று சுபாவமே நமக்கு போதிக்கிறது. (1கொரி 11:15).

தலைமுடி நீளமாய் வளருகிறதற்கு பலவிதமான கூந்தல் தைலங்கள் வந்திருக்கிறது. ஆனால் மகிமை பெருகுவதற்கு பரிசுத்த ஆவியானவரே உதவி செய்கிறவராயிருக்கிறார். எல்லாரும் பாவம் செய்து தேவமகிமை இழந்து போனோம் என்று வேதம் சொல்கிறது. ரோமர் 3:23. ஆதாமுக்கு தேவ மகிமையை கிரீடமாகவே தந்திருந்தார். நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். சங் 8:5 (Crowned him with Glory and honour).

ஆதாம் இழந்து போன தேவ மகிமையை இன்று பரிசுத்த ஆவியானவர் மூலம் பெற்று மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (11கொரி 3:18) என்று கர்த்தர் சொல்கிறார். எனவே கீலேயாத் மலை மகிமையின் மலையாகும். பரிசுத்த ஆவியானவரைப் பெற்று அந்நிய பாஷை பேசி மகிமையில் நிறைந்தாலே கர்த்தருடைய வருகையில் செல்ல முடியும். (எபே 4:30).

## வெள்ளைப் போள மலை - சாந்தத்தின் மலை :

மணவாட்டியாகிய சூலமித்தியாள் வாசம் செய்த மூன்றாவது

மலையும் நான்காவது மலையும் உன் 4 : 6ல் சொல்லப்பட்டுள்ளது. பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்து போகும் வரைக்கும் நான் வெள்ளைப்போள மலையிலும் சாம்பிராணி மலையிலும் போயிருப்பேன். உன் 4 : 6 என்று, ஆத்தும நேசர் சொன்னார் - இந்த இரண்டு மலைகளுக்கும் வரச்சொல்லி ஏற்கெனவே மணவாட்டி உன் 2 : 17 ல் மணவாளனைக் கேட்டுக் கொண்டாள். இதற்கு மணவாளன் சம்மதித்தார்.

வெள்ளைப்போள மலை என்பது சாந்தம் என்று பொருள். (The mountain of myrrh - meekness). இந்த சாந்தகுணம் ஸ்திரிக்கு அலங்காரமாகவும், மணவாட்டிக்கு கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாகவும் தேவன் கொடுத்துள்ளார். உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (மாரநாதா) இந்த மாரநாதா என்ற வார்த்தை 1கொரி 16 : 22ல் கர்த்தர் வருகிறார் என்ற இடத்திலும் போடப்பட்டுள்ளது.

எனவே சாந்த குணமுள்ள ராஜாவுக்கு சாந்த குணமுள்ள மணவாட்டியைத் தேடுகிற பரிசுத்த ஆவியானவர் வெள்ளைப் போல மலைக்கு அழைத்துப் போகிறார்.

## துக்கத்தின் மலை :

வெள்ளைப்போல மலையின் ஆவிக்குரிய அர்த்தம் துக்கம் என்பதாகும். பக்திவாழ்வு வாழும் தேவபிள்ளைகளை சில நேரம் துக்கத்தின் அனுபவங்களிலும் தேவன் வழிநடத்துகிறார். தேவபிள்ளைகளுக்கு உண்டாகும் துக்கம் லௌகீக துக்கம் அல்ல. தேவனுக்கேற்ற துக்கத்தையே தேவன் அனுமதிக்கிறார்.

தேவனுக்கு கீழ்ப்படியாமல் அபிஷேகத்தை நஷ்டப்படுத்தின சவுல்ராஜாவுக்காக சாமுவேல் தீர்க்கதரிசி துக்கித்துக் கொண்டிருந்தார். (1சாமு 15 : 35; 1சாமு 16 : 1)

எருசலேமின் அலங்கம் இடிந்து கிடக்கிறதே என்று சில நாளாய் துக்கித்து உபவாசித்து நெகேமியா ஜெபித்தான். அப்பொழுது எருசலேமின் அலங்கம்கட்டப்பட்டது (நெகே 1:4; 2:1) என்று பார்க்கிறோம்.

இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்படவில்லையே என்று பவுல் துக்கப்பட்டார் (ரோமர் 9:1). இதினிமித்தம் யூதர்களில் சிலர் இரட்சிக்கப்பட்டார்கள் என்று பார்க்கிறோம். தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது (11கொரி 7:10).

பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்து போன பின்பு இருள் வந்து விடும். இந்த இருளான நேரங்களில் ஆவிக்குரிய துக்கங்களை சுமக்கவேண்டியது வரும். இப்படிப்பட்ட வேளைகளில் மணவாட்டி என்ன செய்ய வேண்டும்?

உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி தன் தேவனைச், சார்ந்து கொள்ளக் கடவன் (ஏசா 50:10) என்று ஏசாயா சொல்கிறார்.

வெளிச்சத்துக்குக் காத்திருந்தோம், ஆனாலும் அந்தகாரத்திலே நடக்கிறோம் என்று ஏசாயா சொல்கிறார். ஏசா 59:9.

இந்த இருளின் நாட்களில் தன் சுய பெலத்தில் இருளைவிட்டு வெளியே வர முயற்சிக்கக் கூடாது. கர்த்தரே வெளிச்சத்துக்குள் நம்மைக் கொண்டுவர காத்திருக்க வேண்டும். தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர். என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார் சங். 18:28 என்று தாவீது விசுவாசித்தபடியே கர்த்தருக்கு காத்திருங்கள். வெள்ளைப் போல மலையின் இரண்டாவது ஆவிக்குரிய விளக்கம் இதுதான்.

## பொக்கிஷங்களின் மலை :

கர்த்தர் நம்மை இருளான அனுபவத்திற்குள் நடத்தும்போது நமது வாழ்விலும் ஊழியத்திலும் பெரிய ஆசீர்வாதம் அதற்கு அடுத்தபடியாக உள்ளது என்று தைரியப்பட வேண்டும். வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்பாளர்களை முறித்து அந்தகாரத்தில் (இருளில்) இருக்கிற பொக்கிஷங்களையும் ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் சொன்னபடியே (ஏசா 45 : 4) நமக்கு புதையல்களைப் போல ஆத்தும அறுவடையையும், பொருளாதார ஆசீர்வாதங்களையும் தருவார். எனவே வெள்ளைப் போள மலையின் துக்க அனுபவங்களை, இருளான நேரத்தையும் கண்டு துவண்டுவிட வேண்டாம்.

''எருசலேமிலுள்ள சபைக்கு துன்பம் உண்டாயிற்று என்றால் சமாரியா பட்டணத்திலே மிகுந்த சந்தோசம் உண்டாகும்''.

என்றுதான் பொருளாகும். அப் 8 : 1, 8 : 8, எனவே மணவாட்டி சபையானது கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு வெள்ளைப் போள மலைக்கு அடிக்கடி போய்வரட்டும்.

## 4. சாம்பிராணிமலை :

மணவாட்டியாகிய சூலமித்தியாளும் மணவாளனாகிய சாலமோனும் கடைசியாய் சென்ற மலை சாம்பிராணிமலையாகும். பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்து போகும் வரைக்கும் நான் வெள்ளைப்போள மலையிலும் சாம்பிராணி மலையிலும் போயிருப்பேன் என்று சொல்லப்பட்டுள்ளது. (உன் 4 : 6).

சாம்பிராணி தன்னுடைய நறுமணத்தைக் கொடுக்கும்படி அக்கினியில் போடப்படுகிறதே அது போல தேவ ஜனத்திற்குள் இருக்கும் தெய்வீகத் தன்மையை இந்த உலகத்திற்கு காட்டி

கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவும், ஜீவனுள்ள தேவனை இந்த உலகத்திற்கு காட்டி, இரட்சிக்கவும் சாத்ராக், மேஷாக் ஆபேத் நேகோ என்ற யூத வாலிபர்களை அக்கினிச் சூளைக்குள் போட தேவன் அனுமதித்தது போல் இன்றும் நம்மை அக்கினி வழியாய் சில நேரங்களில் அழைத்துப் போகிறார்.

பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி, உங்கள் நடுவில் பற்றயெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமை என்று திகையாமல் கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோசப்படுங்கள் (1 பேதுரு 4:12, 13) என்று கர்த்தர் சொல்கிறார்.

அக்கினியில் போடப்படும் சாம்பிராணி நறுமணம் வீசுவது போல் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும் நாங்கள் கிறிஸ்துவின் நற்கந்தகமாயிருக்கிறோம் என்று பவுல் எக்காள முழக்கமிடுகிறார். 11கொரி 2:15. இதுபோலவே சாம்பிராணிமலையில் வாசம் பண்ணும் ஒவ்வொரு மணவாட்டியும் நறுமணம் வீசும் நற்கந்தகமாக திகழ்வோமாக!

# 7

# மணவாட்டியின் அன்பு

உன்னதப்பாட்டின் புஸ்தகத்தில் நேசரைக் குறித்து 15 முறையும் மணவாட்டியின் நேசத்தைக் குறித்து 35 முறையும் சொல்லப்பட்டுள்ளது. எனவே இந்தக் கடைசி அதிகாரத்தில் மணவாட்டியின் அன்பை, நேசத்தைக் குறித்து நான்கு அனுபவங்களைத் தியானிப்போம்.

## *1. அன்பில் அகப்பட்டவள் :*

அதி 1 : 1 முதல் 3 : 6 வரை, மணவாட்டியாகிய சூலமித்தியாள் மணவாளனாகிய சாலமோனைப் பார்த்து ''அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக; உமது நேசம் திராட்சரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது ''உன் 1 : 2 என்றாள். அன்பு மிகுதியாகும் போதே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முத்தமிடுகிறார்கள். இதுபோலவே மணவாளன் மீது மணவாட்டிக்கு அதிக அன்பு உண்டாகிவிட்டது. எனவேதான் மணவாளனை முத்தமிட விரும்பினாள்.

கிறிஸ்தவ ஜீவியமும், ஊழியமும் அன்பினால் நிறைந்தே செய்யப்பட வேண்டும். அன்பில்லாத குடும்பம் அன்பில்லா சபை வனாந்திரமாக காட்சியளிக்கும். மணவாளனின் அன்பை மூன்று நிலைகளில் மணவாட்டி அனுபவிக்கிறாள்.

★ மணவாட்டி இரட்சிக்கப்பட்ட போது யோவான் 3 : 16 ஓசியா 11 : 4

★ மணவாட்டி அபிஷேகம் பெற்றபோது ரோமர் 5 : 5, 11 தீமோ 1 : 7

★ மணவாட்டி இராப்போஜனம் எடுக்கும் போது, யோவான் 13 ; 1 யூதா 1 : 12.

மணவாளனின் அன்பை ருசிக்கும் இடமாக அவருடைய சபையைத் தேவன் வைத்துள்ளார். அன்பிலே வேரூன்றவும், எபே 3:17; அறிவுக் கெட்டாத அந்த கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ளவும் (3:19) தான் சபையில் நாம் நிலைத்திருக்க வேண்டும்.

அன்பு என்னும் இரதம் ஏறி
அர்ப்பணிப்பு என்னும் பரிகள் பூட்டி
அறியாமை என்னும் அரக்கனைத் துரத்த
புறப்படட்டும் தேவ சேனை

என்று GEMS ஸ்தாபனத்தின் செயலாளர் சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் கூறுகிறார். தேவனுடைய பிள்ளையே உன் உள்ளம் கிறிஸ்துவின் அன்பால் இப்பொழுதே நிரம்புவதாக! உன் இருதயத்தில் கிறிஸ்துவின் மேல் அன்பிருந்தால் அவருக்காக நீ எந்த சூழ்நிலையிலும் சந்தோசமாயிருப்பாய்.

## 2. அன்பில் இணைந்தவள்:

உன் 3:6 முதல் 5:2 வரை வனாந்திரத்தில் தன் நேசரின் அன்பை உணர்ந்து நேசரின் அன்பில் அகப்பட்டவள் பின்பு நேசரின் வீட்டுக்கு வந்து நேசரின் அன்பில் இணைக்கப்படுகிறாள்.

இதோ சாலமோனுடைய மஞ்சம் என்றும் அங்கே நேசம் என்னும் சமுக்காளம் விரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். உன் 3:7; 3:10.

சீயோன் குமாரத்திகளே! நீங்கள் புறப்பட்டுப் போய் ராஜாவாகிய சாலமோனின் கலியாணநாளிலும் மனமகிழ்ச்சியின் நாளிலும் அவருடைய தாயார் அவருக்கு சூட்டின முடியோடிருக்கிற அவரைப் பாருங்கள் (உன் 3:11) என்கிறாள்.

ராஜாவாகிய சாலமோன் தன் தாயாரால் முடிசூட்டப்பட்டபோது தன் சத்துருக்கள் எல்லோர் மீதும் சாலமோன் ஜெயம் எடுத்தவராக இருந்தார். ராஜபதவிக்கு

ஆசைப்பட்ட அப்சலோம், அதோனியா போன்றோர்மேல் சாலமோன் ஜெயமெடுத்த நாளே சாலமோனின் கலியாணநாளும், முடிசூட்டப்பட்ட நாளுமாகும்.

இதைப் போல் நம் ஆத்தும நேசர் முட்கிரீடம் சூட்டப்பட்டு சிலுவையில் அறையப்பட்ட போது உலகம், மாம்சம், பிசாசு, மரணம், பாதாளம் யாவற்றின் மீதும் இயேசுகிறிஸ்து ஜெயமெடுத்தார். தொடர்ந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த நாளே நமக்கு மனமகிழ்ச்சியின் நாள்.

எனவே சிலுவை தியானத்திலும், உயிர்த்தெழுந்த வல்லமையிலும் நாம் தியானமாயிருப்பதே மணவாளன் கிறிஸ்துவின் அன்பில் ஐக்கியப்படும் அனுபவமாகும். மணவாட்டியானால் மணவாளனோடு அன்பில் ஐக்கியப்படும்போது,

★ 11கொரி 5 : 14. கிறிஸ்துவின் அன்பு நெருக்கி ஏவும்.

★ எபே 1 : 4. அன்பில் பரிசுத்தமாயிருப்பாள்

★ எபே 4 : 15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்வாள்.

★ கொலே 1 : 8. ஆவிக்குள்ளான அன்புடையவளாயிருப்பாள்.

★ எபி. 6 : 10 அன்பின் பிரயாசம் காட்டுவாள்.

★ பிலி 1 : 17. அன்பினால் கிறிஸ்துவை அறிவிப்பாள்.

★ 11யோவான்.6 - கற்பனைப்படி நடந்து அன்பு கூறுவாள்.

இவ்விதம் அநுதினமும் கிறிஸ்துவின் அன்பில் இணைக்கப்பட்டவர்களே மணவாட்டியாக மகிமையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

## 3. அன்புக்காக போராடுபவள்:

உன் 5:2 முதல் 7:10 வரை, மணவாளனின் அன்பில் இணைக்கப்பட்டவளுக்குள் அந்த அன்பை இழந்து

போகும்படியான சோதனைகள் வந்தது. இதை நம் ஆண்டவர் ஏற்கனவே தீர்க்கதரிசனமாக எச்சரித்துள்ளார். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போகும். குளிர்ந்து போகும். மத் 24 : 12, என்று சொல்லியுள்ளார். இந்த எச்சரிப்பை மறந்த எபேசு சபை ''ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டு'' விட்டது. ''வெளி 2 : 4 என்று கர்த்தர் சொன்னார். கடைசி நாட்களில் சிலர் சபாவ அன்பில்லாதவர்களாய் இருப்பார்கள் 11 தீமோ 3 : 3 இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு என்று ஆவியானவர் கட்டளையிடுகிறார். எனவே தேவ அன்பை இழந்து போகும்படி வரும் மூன்று இடையூறுகளை கவனிப்போம்.

## A. *நித்திரை :*

மணவாளனின் அன்பிலிருந்து பிரிக்கக்கூடிய முதல் காரியம் நித்திரைப் பிரியமாகும். நான் நித்திரை பண்ணினேன் உன் 5 : 2 லும் என் நேசர் போய்விட்டார் என்று உன் 5 : 6 லும் பார்க்கிறோம். எனவே தேவபிள்ளைகளுக்கு தூக்கத்தில் பிரியம் இருக்கக்கூடாது.

இரவும் பகலும் வேத வசனதியானம் சங் 1 : 3,
இரவும் பகலும் ஜெபம் லூக் 18 : 7

ஆகியவையே நேசரின் அன்பில் நம்மை நிறைந்திருக்கச் செய்யும்.

## B. *சோம்பல் :*

நேசர் இயேசு, கதவுக்கு வெளியே நிற்கிறார். கதவைத் திறக்கச் சொல்லி தட்டுகிறார். மணவாட்டியோ ''என் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேன். நான் எப்படி அவைகளைத் திரும்பவும் உடுப்பேன்'' என்று (உன் 5:3) சொன்னாள். இரவில் போடும் வஸ்திரத்தைக் கழற்றிவிட்டு தகுதியான வஸ்திரத்தை உடுத்துவதற்கு சோம்பல் நிர்விசாரம் உள்ளவளாய் காலம் தாழ்த்துகிறாள்.

தேவ ஜனமே! கர்த்தர் உன்னோடு பேசும் அழைப்புக்கும் உபதேசத்துக்கும் கீழ்படிய நிர்விசாரமாய் இராதே, சோம்பல் உள்ள மணவாளியானவள் கிறிஸ்துவின் அன்பை இழந்து போவாள்.

## C. உலக உல்லாசம் :

மணவாட்டியாகிய சபை தன் ஆண்டவர் மேல் உள்ள அன்பால் நெருக்கப்பட்டு சுவிசேஷ ஊழியங்களை தீவிரமாய்ச் செய்வது ஆதி அன்பாகும். காடுகளிலும், கிராமங்களிலும், பட்டணங்களிலும், சுவிசேஷம் சொல்லப்பட்டிராத மலைகளிலும் சென்று சுவிசேஷம் அறிவித்த காலம் ஆதி அன்பின் காலமாகும். அவர்களுடைய பாதங்களைக் குறித்து ''சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கிறது'' (ஏசா.52:7) என்று மணவாளன் புகழ்ந்தார்.

மணவாட்டியின் கால்கள் மலைகளிலும், காடுகளிலும் நடந்த போது பாதங்கள் அழுக்காகியிருக்கும். சுவிசேஷத்துக்காக பாடுபட்ட பாதங்களே அழகான பாதம் என்று இயேசு சொன்னார். இன்றோ உலகம் என்னும் உல்லாச மெத்தையில் மணவாட்டி படுத்துக் கொண்டு இறங்கி வர மறுக்கிறாள். என் பாதங்களைக் கழுவினேன். நான் எப்படி அவைகளைத் திரும்பவும் அழுக்காக்குவேன் (உன் 5:3) என்று சொல்கிறாள்.

தேவ ஜனமே நீங்கள் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி போக வேண்டும். சுவிசேஷ ஊழியங்களுக்காக ஜெபிக்க வேண்டும். சுவிசேஷ ஊழியங்களுக்கு கொடுக்க வேண்டும். இந்தப் புத்தக ஊழியம்

Silent Preacher;
Never Back sliden missionery.

என்று பரிசுத்தவான்களால் அழைக்கப்படுகிறது. புத்தக வடிவில் வெளிவரும் செய்திகள் அமைதியாகப் பேசிக் கொண்டேயிருக்கும். ஒருபோதும் இந்த புத்தகம் என்னும் சுவிசேஷன் பின்வாங்கப் போவதே இல்லை. வட இந்தியாவிற்கும், வெளிநாடுகளுக்கும், கம்யூனிச தேசங்களுக்குள்ளும், மலைகளில் உள்ள ஆதிவாசிகளுக்குள்ளும் ஜெயில்களுக்குள்ளும் செல்லும் இந்த புத்தக ஊழியம் பல இன்னல்கள் மத்தியில் நடக்கிறது இவைகளையும் நீங்கள் உங்கள் காணிக்கையால் தாங்கலாம்.

எப்படியும் சுவிசேஷ ஊழியம் செய்ய வேண்டும். பாதங்களை அழுக்காக்க மாட்டேன் என்று உல்லாச கட்டிலைவிட்டு இறங்காத மணவாட்டியை விட்டு நேசர் போய்விட்டார். உன் 5:6. நேசரின் அன்பை இழந்து போகாதே. நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு. தீங்கனுபவி. சுவிசேஷகனுடைய வேலையைச் செய். உன் ஊழியத்தை நிறைவேற்று 11தீமோ 4:5 என்று கர்த்தர் சொல்கிறார்.

## 4. அன்பில் பூரணப்படுபவள்:

உன் 7:11 முதல் 8:14 வரை, உன்னதப்பாட்டின் நிறைவு செய்தியானது, நிறைவு அனுபவமானது மணவாளன் இயேசுவின் அன்பில் தொடர்ந்து நிலைத்திருந்து, தொடர்ந்து வளர்ந்து அன்பில் பூரணப்படுவதாகும். கிறிஸ்துவின் மேல் உள்ள மணவாட்டின் அன்பில் இனி குறைவோ, பிரிவோ இல்லையென்பதை ஏழுவார்த்தைகளால் நாம் அறியமுடியும்.

A. நேசரே! என்னை நீர் உமது இருதயத்தின் மேல் முத்திரையைப் போலவும் உமது புயத்தின் மேல் முத்திரையைப் போலவும் வைத்துக் கொள்ளும் என்று (உன் 8:6) சொன்னாள். முத்திரை போடப்பட்டது வேறு எவருக்கும் சொந்தமல்ல. முத்திரை போட்டவர்க்கு சொந்தமானவள். மேலும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்காக முத்திரையாகப் பெற்ற பரிசுத்த ஆவியானவரை

துக்கப்படுத்தாமலிருங்கள் (எபே 4 : 30) என்று இதைத்தான் சொன்னார்.

B. நேசம் மரணத்தைப் போல் வலியது என்று மணவாட்டி சொன்னாள். மரணம் எவ்வளவு அதிகமாக வேதனையை உண்டாக்குமோ அவ்வளவாக நேசரைப் பிரிவது மணவாட்டிக்கு வேதனையாய் இருக்கிறது என்கிறாள். உன் 8 : 6.

C. மணவாளன் மீதுள்ள அன்பைவிட்டு பிரிவது எனக்கு பாதாளத்துக்கு போவது போல் உணர்கிறேன் என்று மணவாட்டி உணர்கிறாள். உன் 8 : 6. நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடியது என்றாள்.

D. அக்கினி எரியும் இடத்தில் சில அடி உயரத்திற்கு தழல் பறந்து வருவது போல் மணவாட்டியின் உள்ளத்தில் நேச அக்கினியும் மணவாட்டின் வார்த்தையில் நேச தழல்போல வார்த்தைகளும் உள்ளதாக சொல்கிறாள். உன் 8 : 6.

E. அக்கினியின் மேல் தண்ணீரை ஊற்றினால் அக்கினி அணைந்து போகும். ஆனால் மணவாளன் இயேசுவின் மீதுள்ள அன்பை அணைக்க 17 காரியங்கள் (ரோமர் 8 : 36.39) வந்தது. ஆனாலும் ஒன்றும் நேசர் மீதுள்ள அன்பைவிட்டு என்னை பிரிக்க முடியவில்லை என்று பவுல் சொல்கிறார்.

F. அக்கினியைத் தண்ணீர் ஊற்றி அணைக்க முடியவில்லை. ஆனால் வெள்ளங்கள் புரண்டு வந்து நேச அக்கினியை அணைக்க பார்த்தது. வெள்ளம் போல சத்துரு வந்தாலும் (ஏசா 59 : 19) உலக அன்பு, மாம்ச அன்பு, வந்து குறுக்கிட்டாலும் ஆத்தும நேசர் மீதுள்ள அன்பை விட்டு விலகவே முடியாது. இதுவே மணவாட்டியின் அன்பின் ஜீவியமாகும்.

G. மணவாளன் இயேசுவின் மீதுள்ள அன்பை விட்டுவிட திரளான ஆஸ்தியைக் கொடுத்தாலும் அது முற்றிலும் அசட்டை பண்ணப்படும். (உன் 8 : 6) சாதுசுந்தர்சிங் சீக்கிய

மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டபோது அவருடைய தகப்பனார் தன் வீட்டில் உள்ள பீரோவில் பணக்கட்டுகளாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த பொக்கிஷங்களைக் காட்டி ''மகனே எல்லாம் உணக்குத்தான்'', இயேசுவை மாத்திரம் விட்டுவிடு என்றாராம். சாது சுந்தர்சிங் அந்த ஆஸ்திகளை அசட்டை செய்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறினார். இவ்விதமாக இயேசுவின் மேலுள்ள நேசத்துக்காக ஜீவிப்போரே மணவாட்டியாக பறந்து செல்ல முடியும். கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் இவ்வித பூரண அன்பில் நடத்தி மத்தியவானில் கூட்டிச் சேர்ப்பாராக! ஆமென். அல்லேலூயா!

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

1. ஆவி, ஆத்துமா, சரீரம்
2. கொடியேற்றுங்கள்
3. மகிமையின் மேல் மகிமை
4. உறுதியான அஸ்திபாரம்
5. வாழ்வளிக்கும் வயல்
6. எழுப்புதலும் நியாயத்தீர்ப்பும்
7. திறப்பில் நிற்கும் ஊழியன்
8. திசை மாறிய தீர்க்கதரிசி
9. உலகம் மாமிசம் பிசாசு
10. கடைசிக் கால பாபிலோன்
11. கிறிஸ்துவின் மணவாட்டி
12. சிந்தனையில் பரிசுத்தம்
13. சீயோன் கோட்டையைபிடியுங்கள்
14. ஏதேன் தோட்டம்
15. பரலோக, பாதாள வாசல்
16. ஆவியின் வரங்கள்
17. ஆவியின் கனிகள்
18. யூதா நிருபம்
19. சிறையிலிருந்து சிங்காசனம் வரை
20. இரட்சகனாகிய தீர்க்கதரிசி
21. தேவாலயத்தின் தூண்கள்
22. இதோ மணவாளன் வருகிறார்
23. சொப்பனங்களும் தரிசனங்களும்
24. மேய்ப்பனாகிய தீர்க்கதரிசி
25. ஸ்தல சபையின் வளர்ச்சி
26. எபிரெயர் நிருபம்
27. யோவான் ஸ்நானகன்
28. கானான் யாத்திரை
29. போய் சுதந்தரித்த ஆபிரகாம்
30. துணையாளராகிய ஆவியானவர்
31. சாலமோன் ராஜா
32. ஆசீர்வாதமான கிறிஸ்தவம்
33. பாவம்
34. கர்த்தரின் பட்டயம்
35. தேவனுடைய இராஜ்யம்
36. இலக்கை அடைவது எப்படி?
37. விசுவாசத்தை வளர்ப்பது எப்படி?
38. பரிசுத்த ஜீவியம்
39. அபிஷேகத்தை அனல்மூட்டுவது எப்படி?
40. எழுந்து கட்டுவோம் வாருங்கள்
41. மன்னாதி மன்னன் இயேசு
42. ஆராதனைக்கு ஓர் அழைப்பு
43. சிறிய தீர்க்கதரிசனங்களின் விளக்கவுரை
44. வல்லமையை பெற்றுக் கொள்வது எப்படி?
45. ஜெயஜீவியமும் செழிப்பான வாழ்வும்
46. ஆராதிப்பது எப்படி?
47. பிரோயஜனமுள்ளவனாவது எப்படி?
48. யேசபேன் ஆவி
49. நமது அதிகாரங்கள்
50. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்
51. சீஷர்களாக்குங்கள்
52. பாரம்பரியமா? பரிசுத்த ஆவியானவரா?
53. புதிய ஏற்பாட்டு சபை
54. எப்பாபிரா
55. நீதிமானாவது எப்படி?
56. ஊழிய வரங்கள்
57. மேலான இயேசுவின் நாமம்
58. வேதம் கற்பது எப்படி?
59. ஆவிக்குரிய போராயுதங்கள்
60. தேவன் யார்? எப்படிப்பட்டவர்?
61. தசமபாகம் கொடுக்க வேண்டுமா?
62. வெற்றியுள்ள கிறிஸ்தவன்
63. பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பவர்கள் யார்?
64. ஓடு ஓடு ஓடு?
65. திரும்பி வரும் தேவ மகிமை
66. விழுந்தவன் எழும்ப முடியுமா?

## ஆசிரியரின் வெளியிடுகளில் சில








**ஆசிரியரின் பிறநூல்கள் மற்றும் Message DVD Online-யில் வாங்க இணையதளத்தை பாருங்கள்**

**www.TamilChristianStore.in**

ஆசிரியரின் 66புத்தக வரிசை அறிய முன்பக்கம் பார்க்கவும்

## இந்நூலைப் பற்றி...

சாலமோனின் உன்னதபாட்டிற்கு, விளக்கவுரை நூல்கள் சில உண்டு. ஆனால் இறையியலின் படி உண்மை சத்தியத்தை, எளிய நடையில் உபதேச அடிப்படையில் எடுத்துச் சொல்வதே இந்நூல்.

- எபிரேயர் நிருபத்தில் சாலேமின் ராஜாவை காண்கிறோம்.
- எபேசியர் நிருபத்தில் அந்த ராஜாவின் மணவாட்டியாகிய ராணியை காண்கிறோம்.
- உன்னதப்பாட்டு புத்தகத்தில் மணவாட்டியின் தகுதிகளை தியானிக்கிறோம்.

மணவாளனாகிய இயேசு தனது மணவாட்டியை எப்படியெல்லாம் புகழ்ந்து பேசுவார் என்ற விளக்கத்தை இந்நூலில் காண்கிறோம். மணவாளன் இயேசுவுக்காக மணவாட்டியாகிய புதிய ஏற்பாட்டு சபை எப்படிப்பட்ட அனுபவங்களில் எல்லாம் ஆயத்தமாகிறாள் என்பதை விளக்கிச் சொல்வதே இந்நூல்.

இப்புத்தகத்தில் சொல்லப்பட்டதின் படி உங்களை நீங்கள் ஆயத்தம் செய்வீர்களானால், கர்த்தர் சீயோனை கட்டி தமது மகிமையிலே வெளிப்படும் போது, நீங்களும், உங்கள் குடும்பமும், உங்கள் சபையும் அங்கே காணப்படுவீர்கள் என்பது நிச்சயம்.

### ஆசிரியரை பற்றி...



**சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான். ஏசா. 60:22**

என்ற வாக்குத்தத்தை தரிசனமாக பெற்று கர்மேல் பெந்தெகொஸ்தே சபையை ஸ்தாபித்து அதின் மூத்த போதகராக பணியாற்றும் இவர் கடந்த 34 ஆண்டுகளாக சபையின் மேய்ப்பராக, வேதாகம போதகராக, சபைகளை ஸ்தாபிக்கும் அப்போஸ்தலராக தேவனால் பயன்படுத்தப்படுகிறார்.

அகில உலகமும் பயணம் செய்து மத். 28:19ன் படி கிறிஸ்துவுக்கு சீஷர்களை உருவாக்க கருத்தரங்களில் போதித்து வருகிறார். ஆசிரியர் எழுதிய 66வது புத்தகமே உங்கள் கையில் தவழும் இப்புத்தகம் இவரின் புத்தக செய்திகள் உலகின் 85 நாடுகளுக்குள் கடந்து சென்று எழுப்புதல் தீயை பற்ற வைத்துள்ளது.

ஆக்கியோன்
**பாஸ்டர் மா. ஜான்ராஜ்**
சீயோன் கோட்டை சர்வதேச ஊழியங்கள்
26, D, காந்தி ரோடு, சிவகாசி - 626 123.
தமிழ்நாடு - இந்தியா.
போன்: 0091 - 4562 - 277209